## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.10.2023 பொதுக்காலம் 26ம் ஞாயிறு - திருப்பலி 02

05.10.2023 அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி - திருப்பலி 03

07.10.2023 செபமாலை மாதா - திருப்பலி 04

08.10.2023 பொதுக்காலம் 27ம் ஞாயிறு - திருப்பலி 05

13.10.2023 அரு. அலெக்சாண்ட்ரீனா மரிய தா கோஸ்தா - திருப்பலி 07

15.10.2023 பொதுக்காலம் 28ம் ஞாயிறு - திருப்பலி 08

16.10.2023 அருளாளர் அகுஸ்தின் தேவாரம் பரம்பில் - திருப்பலி 09

17.10.2023 அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் நினைவு-திருப்பலி 10

18.10.2023 புனித லூக்கா நற்செய்தியாளர் விழா - திருப்பலி 12

22.10.2023 பொதுக்காலம் 29ம் ஞாயிறு - திருப்பலி 13

24.10.2023 புனித லூயிஜி குவனெல்லா - திருப்பலி 14

28.10.2023 புனிதர்கள் சீமோன், யூதா, திருத்தூதர்கள் விழா - திருப்பலி 15

29.10.2023 பொதுக்காலம் 30ம் ஞாயிறு மற்றும் அருளாளர் ரூவா - திருப்பலி 16


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


இறைவன் தந்த வானத்தூதர்கள் 18

அருளாளர் அகுஸ்தீன் தேவாரம்பரம்பில் வாழ்வு தரும் பாடம் 21

அருளாளர் அலெக்சாண்ட்ரினா வரலாறு அறிவோம் 24

திருஅவைச் செய்திகள் 26

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.10.2023 பொதுக்காலம் 26ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

I. எசே. 18: 25-28 II. பிலிப். 2: 1-11 மத். 21: 28-32

ஆண்டவரில் நம்பிக்கைக்கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு நீதி நேர்மையோடு, நன்மையில் நிலைத்திருந்து, இறைவிருப்பம் நிறைவேற்ற இறைவன் அழைக்கின்றார். இன்றைய முதல் வாசகத்தில் நேரியவர் நேர்மை தவறி தீமை செய்தால் சாவார் என்றும் சொல்கிறது. இருவருமே நன்மையில் நிலைபெற வேண்டும், தீமை செய்யலாகாது என்ற மையப்பொருள் விளக்கப்படுகிறது. நற்செய்தியில் தந்தையின் சொல்லுக்கு கீழ்ப்படிய மாட்டேன் என்ற மூத்த மகனின் பண்பு, தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுகிறார் இளைய மகன். தந்தையின் சொல்லுக்குக் கீழ்ப்படிகிறேன் என்று சொல்லிவிட்டு தந்தையின் விருப்பத்தை செய்யாமல் விட்டு விடுகிறார். இதில் மூத்த மகனைப் போன்றவர்கள் யாரெனில், வரிதண்டுவோர், பாவிகள், எளியோர், விலைமகளிர், புறவினத்தாராவர். இவர்கள் மனம்மாறி யோவானின் நீதி, நேர்மையை கடை பிடித்தனர், இயேசுவிலும் நம்பிக்கைக் கொண்டனர்.

இளைய மகனைப்போன்றவர் யாரெனில், திருச்சட்டத்தையும், மேய்ப்புப்பணி பொறுப்பையும், அதிகாரத்தையும் தம் கையில் வைத்திருந்த தலைமை குருக்கள், மறைநூல் அறிஞர்கள், பரிசேயர்கள் ஆவர். இவர்கள் யோவானின் நீதி நேர்மையையும் நம்பவில்லை, இயேசுவையும் நம்பவில்லை. பலரது மனமாற்றத்தைக் கண்டும் மனம் மாற விருப்பமில்லாதவர்கள், வரட்டு கௌரவமும் பிடிவாதமும் கொண்டவர்கள் இறையாட்சியை விட்டு வெகு தொலைவு சென்றார்கள். அன்பிற்குரியவர்களே, நாம் நன்மையில் நிலைத்திருக்க வேண்டும், நன்மை செய்ய வேண்டுமென்பதே இறைவிருப்பம். நம் சொல்லாலும் செயலாலும் இணைந்து இருதண்டவாளத்தைப் போல் வாழ வேண்டும். இல்லையெனில் நம் இறையாட்சிப் பயணம் இலக்கு நோக்கி செல்ல முடியாது என்பதை உணர்ந்து கொள்வோம். இதையே இயேசு மத் 23:3-5ல் "அவர்கள் சொல்வார்கள், செயலில் காட்டமாட்டார்கள்" என்கிறார். நம் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் இறைவிருப்பமாக மாறிட வரம் கேட்டு இப்பலியை பக்தியோடு ஒப்புக்கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உண்மையை எடுத்துரைப்பதே என் பணி என்ற இறைவா, திருஅவைப் பணியாளர்களை உம்பாதம் படைக்கின்றோம். உம் சொல்லுக்கு எப்போதும் கீழ்ப்படிகின்ற நல்ல மனதையும் நன்மையில் நிலைத்திருந்து நற்கனிகளை படைக்கும் பணியாளர்களாக விளங்கிட தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் சுடரே இறைவா, உமது இறைநீதியின்படி நடப்பேன் என்று உறுதியளித்த எம் நாட்டுத் தலைவர்கள், நீதித்தவறாமல் ஆட்சி செய்யும் நல்லுள்ளம் பெற்றிடவும், மக்களை பாகுபாடின்றி மனித நேய உள்ளத்துடன் வழிநடத்தத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. மனம்மாறியவர் என்பதை உங்கள் செயல்களால் காட்டுங்கள் என்ற இறைவா, இங்கு கூடிசெபிக்கும் நாங்கள் உமது சொல்லை சிரமேற்கொண்டு செயல்படும் பிள்ளைகளாய் வாழ, எங்கள் எண்ணங்களை மாற்றிக்கொண்டு உமது விருப்பத்தை எங்கள் செயல்களால் மெய்ப்பித்து வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. ஒரு பாவியை அல்ல, பாவத்தையே வெறுக்கிறேன் என்று கூறிய இறைவா, உண்மையை அறிந்தும், உம்மை ஏற்றுக்கொள்ளாதவர்கள் உம்மை மறுதலிப்போர், பிடிவாதம் குணமுடையோர், கடின உள்ளத்தோர், கௌரவம் பார்ப்போர், கடவுளை மறந்தோர், தீமையில் நிலைத்திருப்போர் இவர்கள் அனைவரும் உமது பேரிரக்கத்தால் மனமாற்றத்தின் ஆவியைப் பெற்று வாழ்வடைய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 05.10.2023 அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவின் அன்பு நண்பர்களே, திருஅவை இன்று அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லியின் நினைவு நாளை சிறப்பிக்கின்றது. இவர் 1918, மார்ச் 21ம் நாள் இத்தாலி நாட்டில் பெரேரா என்னும் ஊரில் பிறந்தார். இவர் தனது இளமைப் பருவத்தில் சலேசியர்களால் நடத்தப்பட்ட இளைஞர் மன்றத்திலும் கத்தோலிக்க இயக்கத்திலும் சேர்ந்தார். இங்குதான் இவர் கிறிஸ்தவ நம்பிக்கையில் முதிர்ச்சிப் பெற்று, புனிதத்தை அடைய வேண்டுமென உறுதியான தீர்மானத்தை எடுத்தார். திருத்தந்தை இவரைப்பற்றிக் கூறும்போது, "இவர் வலிமையும், உறுதியையும் கொண்டவர் என்றும் மறைக்கல்விக் கற்றுக்கொடுப்பதிலும், திருத்தூதுப்பணியிலும் ஆர்வம் காட்டினார்" என்று குறிப்பிடுகிறார். அருளாளர் பியர் ஜியார்ஜியோ பிரசாத்தி என்பவரை இவர் இளமைப் பருவத்தில் பின்பற்றினார்.

1941ம் ஆண்டு பொறியியல் வல்லுநர் படிப்பை முடித்தவுடன் 2ம் உலகப்போரின்போது இராணுவத்தில் சேர்ந்தார். 2ம் உலகப்போரின் போது ஏழைகளுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கடினமாக உழைத்தார். 1945ம் ஆண்டு விடுதலை இயக்கத்தின் ஆலோசகராகச் செயல்பட்டு மக்கள் தங்கி வாழ வீடுகளைக் கட்டிக்கொடுத்தார். இவர் தன்னுடைய அர்ப்பண வாழ்வை "கலாச்சாரம் மற்றும் பிறரன்பு" என்ற இரண்டே வார்த்தைகளில் வெளிப்படுத்தினார். இவர் 1946ம் ஆண்டு அக்டோபர் 5ம் நாள் இயற்கை எய்தினார். திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் 2004ம்

ஆண்டு இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தி, "பிறரன்பின் பொறியியல் வல்லுநர்" என்ற சிறப்புப் பட்டத்தைக் கொடுத்தார். இன்று அருளாளர் ஆல்பர்ட் அவர்களின் திருவிழாவைக் கொண்டாடும் நாம் பிறரன்புப் பணிகள் செய்து வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்கள் அனைவரின் தந்தையே, உமது திருஅவையை வழிநடத்தி வரும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவருக்கும் ஒரே தந்தையாக இருந்து ஒவ்வொருவரையும் பாதுகாத்து உமது பிள்ளைகள் என்ற உரிமைப் பேற்றை பெறும் தகுதியை வழங்க வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. "பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டுமென விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என கூறிய இயேசுவே, அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி தன்னை பிறரன்புப் பணிகளில் ஈடுபடுத்தி வாழ்ந்ததுபோல நாங்களும் பிறரன்பு பணிகளில் முழுமையாக எங்களை ஈடுபடுத்தி வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. உடைந்த உள்ளத்தோரைக் குணப்படுத்தும் மருத்துவரே எம் இறைவா, தமது பிள்ளைகள் நிமித்தமாகவும் நோய்கள் நிமித்தமாகவும், கடன்பாரத்தினாலும், தனிமையில் விடப்பட்ட நிலையினாலும் உள்ளம் உடைந்து கண்ணீரோடு வாழ்பவர்களை குணப்படுத்தி ஆறுதல் படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.10.2023 செபமாலை மாதா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய திருக்குலமே, நம் திருஅவை இன்று செபமாலை மாதாவின் விழாவை சிறப்பிக்கின்றது. அக்டோபர் மாதம் என்றாலே செபமாலை மாதாவிற்கு ஏற்ற மாதமாக சிறப்பிக்கப்படுகிறது. நமது மறைந்த திருத்தந்தை 2ம் சின்னப்பர் கூறுவது செபமாலை செபிக்கும்போது நம் கவலைகளெல்லாம் மறந்து நம்மை ஆறுதலாக வைத்திருக்கிறது. செபமாலைமீதுள்ள பக்தி அவரை 4ம் மறையுண்மையாகிய ஒளியின் மறையுண்மையை உருவாக்க வைத்தது. தொடக்கக்கால திருஅவையில் மக்கள் ஒன்றுகூடி 150 திருப்பாடல்கள் பகுதியை பாடினார்கள். பின்பு படிக்க தெரியாதவர்கள் "விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே" என்ற செபத்தை 150முறை சொல்லி செபித்தனர். பின்னர்தான் "அருள் நிறைந்தமரியே" என்ற செபத்தையும் அதன் பிற்பகுதியான "புனித மரியே" என்ற செபத்தை கி.பி. 430ல் எபேசு நகரில் நடந்த மாநாட்டில் சேர்த்து செபிக்கப்பட்டது. 1571ல் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் நடந்த

போரில் செபமாலை செபித்து மக்கள் அன்னை மரியாவிற்கு ஒப்புக் கொடுக்கிறார்கள். அந்த போரில் வெற்றியும் அடைகிறார்கள். 1572ல் அக்டோபர் 7ம் தேதி "வெற்றியின் அன்னை" என்று திருத்தந்தை 5ம் பத்திநாதர் அன்னைக்கு விழா எடுக்கிறார், 1863ல் போரில் செபமாலை செபித்து வெற்றி கிடைத்தது. திருத்தந்தை 13ம் கிரகோரி அன்னையின் செபமாலை புகழைப் பரப்புகிறார். பின்னர் 1917ம் ஆண்டு "பாத்திமா அன்னை காட்சியிலே" எல்லாவற்றையும் சிறப்பாக முடிக்க, செபமாலை ஒரு மிகப் பெரிய கருவி என அறிவிக்கப்பட்டது. இதற்கு முழு காரணம் திருத்தந்தை 13ம் சிங்கராயர். குடும்பத்தில் அனைவருடனும் சேர்ந்து அன்னையின் செபமாலையை செபிப்போம், அவரது புகழை பரப்புவோம். செபமாலை அன்னையின்மீது முழு நம்பிக்கையுள்ளவர்களாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவற கன்னியர் மற்றும் அனைத்து திருநிலையினர்களாகிய நாங்கள் அனைவரும் தினந்தோறும் செபமாலை செபித்து அன்னையின் புகழையும் அவர்தம் திருமகனின் பணிவாழ்வு, பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றை தியானித்து வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. அனைத்துலக வேந்தரே எம் இறைவா, இளைய தலைமுறையினரை உம்பதம் ஒப்புக் கொடுக்கிறோம். இறைபக்தி, செபமாலை பக்தி மற்றும் இயேசுவில் நம்பிக்கைகொண்டு வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அமைதியின் அரசரே இறைவா, பிரிந்து வாழும் தம்பதியினரை உம்பதம் ஒப்புவிக்கிறோம். ஒருவரையொருவர் புரிந்து அன்பு செய்யவும், தவறுகளை திருத்திக் கொள்ளவும், விட்டுக்கொடுத்து வாழவும் அருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 08.10.2023 பொதுக்காலம் 27ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. எசா. 5: 1-17 II. பிலிப். 4: 6-9 மத். 21: 33-43

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, விண்ணையும் மண்ணையும் படைத்து பாதுகாக்கும் இறைவனோடு இணைந்து நாம் அனைவரும் மிகுந்த பலனளிக்க இயேசு கிறிஸ்து நம்மை அழைக்கின்றார். இன்றைய வாசகங்கள் அனைத்தும் நாம் யார்? நாம் எவ்வாறு இறைவன் என்னும் தலைவரின் எதிர்ப்பார்ப்பினை பூர்த்திச் செய்ய முடியும். அவரை விட்டு நீங்கினால் நாம் சந்திக்கும் பிரச்சனைகளையும்

அல்லது பிரச்சனைகள் ஏற்படதவாறு எவ்வாறு நம்மை காத்துக்கொள்ள முடியும் என்பதை விளக்குகின்றது. இறையேசு நம்மை திராட்சை கொடிகளுக்கும் பழங்களுக்கும் ஒப்பாக கூறுகிறார். அவர் நம்மை காக்கும் தோட்டக்காரராகவும், உரிமையாளராகவும் காணப்படுகின்றார். ஏன் நம் இறைவன் நம்மை திராட்சை கொடியின் கிளைகள் பழங்கள் என்கிறார். ஏனெனில் திராட்சை கொடியின் இணைந்திருந்து பழங்களை கொடுக்கின்றது. பின்னர் அதனை பறித்து, மிதித்து, சாறுபிழிந்து சக்கையாக்கி பண்படுத்தி பாதுகாத்து பின்னர் பயன்படுத்தும்பொழுது, அதன் சுவையும், மதிப்பும் விலைமதிக்க முடியாத அளவுக்கு உயருகின்றது. அதைப்போன்றே இறைவன் வெறுமையான உலகில் அனைத்தையும் படைத்தார். அவற்றையெல்லாம் ஆள அவர் சாயலாக மனிதனைப் படைத்து தன் படைப்புகளையெல்லாம் பயன்படுத்த அனுமதியளித்தார்.

இறைவன் நம்மை இறையரசிற்கு ஏற்புடையவராக வாழ வழி-வகைகளைத் தந்து தன ஒரே மகனை துன்பகரமான வாழ்வுக்கு முன்னுதாரணமாக நமக்கு அளித்து மீட்க அவரோடு இணைந்திருக்க அழைக்கின்றார். திராட்சைக்கொடி அதன் கிளைகளோடு இணைந்து பயனளித்தால் அதற்கு மதிப்பு, கிளையை விட்டு கொடி தன் விருப்பத்தில் படர்ந்தால் பலன் குன்றிபோகும். பலனில்லாத கொடி வெட்டி நெருப்பில் இட்டு தீக்கிரையாக்கப்படும். எனவே இறைவனின் உறவிலிருந்து பிரிந்து வாழ்ந்த தருணங்களுக்காகவும் அவரின் நியமங்களை ஏற்காமல், அதன்படி வாழாமல் இருந்த நேரங்களுக்களுக்காகவும் மனம் வருந்தி இப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. "யாரை நான் அனுப்புவேன்" என்ற இறைவனின் குரலுக்கு எம்மையனுப்பும் என இறைப்பணியை இவ்வுலகில் பறைச்சாற்றிட உம்மால் அனுப்பப்பட்ட ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் தங்களின் பணி வாழ்வின் பொருணர்ந்து சிறுசிறு உலக நாட்டங்களில் தங்களை இழந்துவிடாமல் உன்னத புனித வாழ்வினையடைய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

2. "பயப்படாதே நான் உன்னோடு இருக்கிறேன்" என்றுரைத்த எம் இறைவா, நான் உன்னை பலப்படுத்துவேன் நிச்சயம் உதவுவேன் என்று வாக்களித்தீரே, இன்று நாட்டில் தலைவிரித்தாடி வரும் லஞ்சம், தீண்டாமை, ஏழை, பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன், பெண் வன்கொடுமை, குழந்தைக் கடத்தல் போன்றவைகளை நீக்கி நாட்டினை பண்படுத்தி வளர்ச்சிப் பாதையில் மக்களை நடத்திச்செல்ல வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, பிள்ளைகள் படித்து முடித்தபின் அவர்களை புறக்கணித்து சுயநலத்துடன் தங்களின் எதிர்காலத்தை மட்டுமே

திட்டம் தீட்டி வாழும் நிலை வளர்ந்து வருகிறது. இந்நிலை மாறி பெற்றோர் பிள்ளைகளின் உறவு திராட்சைக் கொடிக்கும் கிளைக்கும் உள்ள பிணைப்பினைப் போன்று அன்பு உணர்வுடன் அமைந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 13.10.2023 அருளாளர் அலெக்சாண்ட்ரினா மரிய தா கோஸ்தா திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

அன்பு இறைமக்களே, திருஅவையானது இன்று அருளாளர் அலெக்சாண்டிரினாமரியதாகோஸ்தாவின்விழாவினைகொண்டாடுகிறது. இவர் 1904ம் ஆண்டு மார்ச் 30ம் நாள் போர்ச்சுக்கல் நாட்டில் பிறந்தார். இவர் தனது 14ம் வயதில் தனது கற்பினைக் காத்துக்கொள்ள மூன்று முரடர்கள் பிடியிலிருந்து விடுபட இரண்டாம் மாடியிலிருந்து சன்னல் வழியாக கீழேக் குதித்தார். அதனால் உடம்பில் ஏற்பட்ட காயங்களினால் 30 ஆண்டுகள் படுக்கையில் வாழ்ந்து, தனது துன்பங்களை, வேதனைகளை இறைவனுக்கு பொறுமையோடு ஒப்புக்கொடுத்தார். இவர் 1938 முதல் 1942வரை எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் இயேசுவின் பாடுகளில் பங்கு பெறும் பேற்றினைப் பெற்றார். உலகம் முழுமையும் மரியாவின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணிக்கும்படி திருத்தந்தை 12ம் பத்திநாதரை அணுகி இவர் பணிவோடு கேட்டுக்கொண்டார்.

இவருடைய விண்ணப்பத்தை ஏற்று திருத்தந்தை 1942ம் ஆண்டு அக்டோபர் 31ம் நாளை உலக முழுமையும் அன்னை மரியாவின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணித்தார். இவர் 13 ஆண்டுகள் நற்கருணையை மட்டும் உணவாக உட்கொண்டு உயிர் வாழ்ந்தார். சலேசிய குருவான அருட்திரு உம்பர்த்தோ உதவியுடன் சலேசிய உடனுழைப்பாளராக மாறினார். 1955ம் ஆண்டு அக்டோபர் 13ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். "மனிதனின் மீட்பே இறைவனின் மாட்சி" என்பது இவரது விருதுவாக்கு. 2004ம் ஆண்டு திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். ஆண்டவரின் அடிமையாக வாழ உடல்நிலை ஒரு தடையல்ல என்று வாழ்ந்துக் காட்டினார். இவரின் தன்னம்பிக்கையை நாமும் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன் என எரேமியாவிடம் கூறிய தந்தையே, உமது சீடத்துவப் பணிக்காக நீர் தேர்ந்தெடுத்துள்ள திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் ஆகியோரை உமது பெயரின் வல்லமையால் ஆசீர்வதித்து தூய வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆட்சி செய்கின்ற எம் ஆண்டவரே, எங்கள் நாட்டையாளும் தலைவர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் நீதியான வழியிலும் நேர்மை

மிக்கவர்களாகவும் இருந்து நல்வழியில் மக்களை நடத்திச்செல்லும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பல்வேறு பிணிகளால் வருந்தியோரைக் குணப்படுத்திய மருத்துவரே, இன்று மருத்துவமனைகளிலும், இல்லங்களிலும் பல்வேறு நோய்களின் காரணமாக வருந்திக் கொண்டிருக்கும் உம்பிள்ளைகளை கனிவான கரங்களால் தொட்டுக் குணப்படுத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.10.2023 பொதுக்காலம் 28ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

I. எசா. 25: 6-10 II. பிலி. 4: 12-14, 19-20 மத். 22: 1-14

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று பொதுக்காலம் 28ம் ஞாயிறு திருப்பலி கொண்டாட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ள நாம் அனைவரும் வாழ்க்கையில் என்றும் இன்பமும் துன்ப துயரங்களும் நம்மை சூழ்ந்திருக்கிறது. இறைவார்த்தை நமக்கு காட்டும் நேர் பாதையை அறிந்து வாழ திருவார்த்தைகள் நம்மை உறுதிப்படுத்துகின்றது. முதலில் நமக்கு ஏற்பட்ட அனைத்து அவமானங்களும் மறைந்து இறையாசீரோடு பலநலன்கள் பெற்று வாழ்வோம் என அறிவிக்கின்றது. அவ்வார்த்தை உறுதியானது, ஏனெனில் இதனை இறைவனே அறிவிக்கின்றார் என பற்றுறுதியோடு கூறுகிறது. இதனையே புனித பவுலடிகளாரும் அனைத்திலும் வாழ நான் கற்றுக்கொண்டேன் என தனது சாட்சிய வாழ்வை பகிர்கின்றார். அனைத்தும் இறைவனின் மாட்சியன்றி வேறில்லை, நற்செய்தியிலும் இப்பேர்ப்பட்ட வாழ்விற்குத்தான் இறைவன் உவமை வழியாக நம்மை அழைக்கின்றார். நமது நிலையென்ன? இறைவனின் அழைப்புக்கு செவிசாய்க்கின்றோமா? நற்செய்தியில் கேட்டதுபோல் சாக்குபோக்கு சொல்கிறோமா? இறைவனின் அழைப்பு என்பது யார் வழியாகவும் வரலாம். நாம் அதனை ஏற்று பணிசெய்ய தயாராக இருப்போம். இனிய விருந்திற்கு அனைத்து வரங்களும், அருளும், ஆசீரும் பெற்று சுவைத்திட இத்திருப்பலியில் பக்தியோடு இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, இறைவனோடு ஓர் குலமாக இணைந்திருக்க இறைவன் அழைத்துள்ளார். இந்த உண்மையை உணர்ந்தவர்களாக இறைப்பணியாளர்கள் அனைவரும் இறை மக்களை கூட்டிச் சேர்த்து இறைவார்த்தையையும் திருவிருந்தும் வழங்கி அனைவரையும் சுவை கொடுப்பவர்களாக மாற்றிட வேண்டிய வல்லமைகளை பொழிந்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. தாயை எமக்களித்த இறைவா, அந்த தாய் தந்த செபமாலை என்னும் ஆயுதம் பல அற்புதங்களை செய்துள்ளது. சிலுவைப் போரில் வெற்றியளித்துள்ளது. அதேபோல் இந்த ஆயுதத்தை ஏந்தி நாங்களும்

அனைத்து தீய சக்திகளை முறியடித்து புதிய ஆற்றல், சக்தி, வல்லமை பெற்று வாழ உமதருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. எளிமையான இறைவா, மக்கள் அனைவரும் ஆடம்பரங்களையும், பிரமாண்டங்களையும், விளம்பரங்களையும் தவிர்த்து எளிமை எனும் ஆடையை அணிந்து தானும் வாழ்ந்து பிறரையும் மதித்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்புங்கள் குணமடைவீர் என்ற இறைவா, நம்பிக்கையோடு உம்மிடம் இருகரம் குவித்து கேட்கும் வரங்களனைத்தும் எங்களுக்கு கருணையோடு வழங்கிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 16.10.2023 அருளாளர் அகுஸ்தின் தேவாரம் பரம்பில் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

அருளாளர் தேவாரம் பரம்பில் அகஸ்டின் 1891ம் ஆண்டு ஏப்ரல் 1ம் நாள் இராமபுரத்தில் (கேரளாவில்) பிறந்தார். தேவர் பரம்பில் குலத்தைச் சேர்ந்த இட்டியப்பே மற்றும் எலிஸ்வா ஆகியோருக்கு மகனாக பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே தன் தாயின் மூலமாக தேவதாயின் பக்தியில் வளர்ந்தார். புனித எப்ரெம் பள்ளியில் இடைநிலைக் கல்வியை முடித்து புனித அகஸ்டின் குருமடத்தில் சேர்ந்து இளங்குருவானர் ஆனார். அதன்பின் ஜூலை 16, 1915ல் அருட்பணியாளராக நியமிக்கப்பட்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார். தன்னிடமுள்ள அனைத்தையும் ஏழைகளுக்காகவே செலவழித்தார்.

இவர் தலித் மக்களுக்கு நல்ல சமாரியனாக இருந்தார். தலித் குடும்பத்தை சேர்ந்த குழந்தைகள் அரசு பள்ளியில் சேர்ந்து படிக்கும் அனுமதி மறுக்கப்பட்டதால் இக்குழந்தைகளுக்கு அடிப்படை கல்விதான் முக்கியம் என்பதை உணர்ந்த இவர் இக்குழந்தைகள் படிப்பதற்கான குடிசைகளை அமைத்து கல்வி பயில உதவினார். இவர் ஓய்வின்றி உழைத்தார், அதிகாலையில் திவ்விய நற்கருணைமுன் தன்னையும் அன்றைய நாளில் நடக்கப்போகும் செயல்களையும் அர்ப்பணித்து, மண்டியிட்டு செபிப்பார், அதனால் அநேகர் அவரை வெறுத்தனர். வீட்டு சந்திப்பின்போது அவரை ஏற்றுக்கொள்ளாதிருந்தனர். இருப்பினும் அவர்களோடு அன்பாக பேசி இயேசுவைப்பற்றி எடுத்துக்கூறி அவர்களையும் இயேசுவின் நற்செய்திகளை ஏற்கும் மக்களாகவும், தன்னை நேசிக்கவும் அன்பு செய்யும் மக்களாகவும் மாற்றினார். பாதைகள் சரியானதாக இல்லாதபோதும், கரடுமுரடான கற்கள் நிறைந்த பாதையில் நடந்துச் சென்று மறைப்பரப்புப் பணியை ஈடுபாட்டுன், ஆர்வத்தோடு பணியாற்றினார். தலித் பிள்ளைகள் படிப்பிற்கான கல்வி அமைப்பு, உணவு, உடை இவைகளுக்கு வழி செய்தார். மாலை இல்லத்திற்கு திரும்பியவுடன் மீண்டும் திவ்விய நற்கருணைமுன் அமர்ந்து நடந்த எல்ல ாநல்ல செயல்களுக்காகவும் நன்றி கூறுவார்.

ஆடம்பரத்தை விரும்பாமல் எளிமையாக வாழ்ந்த இவர் தான் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலையில் இருந்தபோது "நான் எப்போதும் ஹரிஜன தலித் மக்களுடன் இருக்கவே விரும்புகிறேன் எனவே என்னுடைய கல்லறையும அங்கேயே இருக்கட்டும், என்னை அவர்கள் வாழ்கின்ற பகுதியிலேயே அடக்கம் செய்யுங்கள்" என்று எழுதிவைத்தார். இன்றும் மக்கள் வெகுதொலைவிலிருந்து அவரது சமாதியை சந்தித்து பல தேவைகளுக்காக அவரிடம் செபிக்கின்றனர். ஜாதிமத வேற்றுமையின்றி ஏழைகளுக்காக ஏழையாகவே வாழ்ந்து இறந்த அவரின் நினைவு நாளை சிறப்பிக்கும் நாம் ஒவ்வொரு மனிதனும் என் நண்பன் ஒவ்வொரு மனிதனும் என் சகோதரன் என்ற எண்ணம் நம்மில் வளரவும் வேற்றுமையில் ஒற்றுமை வளரவும் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் மறைப்பணி ஆற்றுவதிலும், இயேசுவை பிறருக்கு எடுத்துரைப்பதிலும் மனந்தளராமல், இறுதிவரை பணியாற்றும் உடல் உள்ள நலன் பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நன்மைகளின் நாயகனே இறைவா, பிறரின் தேவைகளைக் கண்டுணர்ந்து நம்மால் இயன்ற அடிப்படைத் தேவைகளை செய்து உதவிடவும், சாதி, மத, சமய வேறுபாடின்றி அனைவரையும் நம்மில் ஒருவராக ஏற்றுக்கொள்ளவும், எளிமையான வாழ்வு வாழவும் வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் நாயகனே இறைவா, நற்கருணையில் வீற்றிருக்கும் உம்மிடம் எங்களை ஒப்படைக்கின்றோம். எங்களின் அன்றாட செயல்களில் உறுதுணையாக இருக்கவும், நடந்த அனைத்து செயல்களுக்கும் நன்றி சொல்லும் நல்லுள்ளத்தை அளித்திடவும், உமக்கு ஆராதனை செலுத்தவும், நன்றிப் புகழ் கூறவும் எங்களை ஆசீர்வதித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.10.2023 அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று நம் திருஅவை புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் என்னும் புனிதரை சிறப்பிக்க, நம்மை அழைத்திருக்கிறது. சிரியா நகரில் 15.03.35ல் பிறந்து இயேசுவின் சீடரான புனித யோவானின் சீடராக உருவெடுத்தவர். கி.பி. 69ம் ஆண்டு நமது முதல் திருத்தந்தை புனித இராயப்பர் இவரின் மேன்மையை உணர்ந்து அந்தியோக்கியா நகரின் ஆயராக நியமித்தார். 40 வருடம்

திருஅவையின் போதனைகளை மிக ஆழமாக, தீர்க்கமாக போதித்தார். மன்னன் "தொமினிக் கிறிஸ்தவர்களை வதைத்து கொல்லும் கொடிய வேளையிலும் உறுதியுடன் அச்சமின்றி வேதம் போதித்தவர். மன்னன் திராயன் ஆட்சி பீடம் ஏறியதும் இவரை சிறையில் அடைத்து, சபைக்கு கை விலங்குடன் அழைத்து, "நீர் யார்?" என்று கேட்க அதற்கு புனித இஞ்ஞாசியார்" இயேசுவாகிய ஆண்டவரை என்னுள் சுமப்பவன் என்று கூற "மிருகங்களுக்கு இரையாக்கும்" தியோபோரஸ்" என்னும் மரண தண்டனையை அளித்தான் பின் கப்பலில் ஏற்றி உரோமை "கொலோசியன்" அரங்கத்தில் அனைவரின் முன்னிலையில் இரண்டு சிங்களுக்கு நடுவில் பயணித்தபோது பல போதனைகள் நிறைந்த இரண்டு மடல்களை ஆசியா, கிரேக்கம் ஆசிய நாடுகளுக்கு அனுப்பினார்.

அதில் குறிப்பாக, நான் ஆண்டவரின் கோதுமை மிருகங்களின் பற்களால் அறையப்பட்டு ஆண்டவரின் தூய அப்பமாக மாறுவேன், என்றும் குறிப்பிட்டிருந்தார். ஒருமடலில், "நற்கருணை கிறிஸ்துவின் கதை, நிலை வாழ்வின் மருந்து" என்றும் குறிப்பிட்டிருந்தார். அந்தியோக்கியாவின் 2வது ஆயரான இவர் காலத்தில்தான் "கத்தோலிக்கம்" என்ற வார்த்தை வழக்கத்திற்கு வந்தது. இவரது தூய நிபந்தனையான "நமது உடல் கடவுளின் ஆலயம்" என்ற நிலைப்பாட்டினை ஏற்று நம்மை நாம் தூயவராக மாற்றிக்கொள்ள வேண்டுமென்ற உறுதியோடு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் சிகரமே இறைவா, எம்மை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் ஆகிய நாங்கள் அனைவரும் வாழ்வில் வரும் துன்ப துயரங்களை இயேசுவின் அன்பு ஒன்றே நம்மை நம்மை வழிநடத்தும் என்ற நம்பிக்கையோடு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. தூயவரான இறைவா, "நான் ஆண்டவரின் கோதுமை, கொடிய மிருகங்களின் பற்களில் அரையப்பட்டு ஆண்டவரின் தூய அப்பமாக மாறுவேன்" என்றுரைத்த புனித இஞ்ஞாசியாரை போன்று எல்லாவற்றிலும் தூயோனாக வாழ எங்களுக்கு மனவுறுதித் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் மருத்துவரே அன்பு தந்தையே, நாடெங்கும் பரவியிருக்கும் கருத்து வேற்றுமைகளை களைந்து மக்கள் மகிழ்ச்சியோடு அமைதியோடு, வாழவும், தற்போது பரவி வரும் விஷக்காய்ச்சலால் மக்கள் துன்பப்பட்டு வரும் சூழ்நிலையில் மேலும் பரவாமலிருக்க உம் அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 18.10.2023 புனித லூக்கா நற்செய்தியாளர் விழா திருப்பலி

**முன்னுரை** திரு. T. சாம்சன்

இறையேசுவின் அன்பு இறைச்சமூகமே, இன்றைய நற்செய்தியாளர் புனித லூக்கா அவர்களின் திருவிழாவை நாம் கொண்டாடுகின்றோம். அவர் சிரியாவின் அந்தியோக்கு நகரில் பிறந்தார்.இவர் மருத்துவர் மட்டுமன்று சிறந்த ஓவியர், கவிதை, கலை, குழு ஆய்வு, விளையாட்டு போன்ற துறைகளில் கை தேர்ந்தவர். கனிவான குணம், இரக்க உள்ளம், தாராளமாக உதவும் மனப்பான்மை போன்றவை இவருடைய குணங்கள். புனித லூக்கா இயேசுவைக் கண்டதுமில்லை அவரது போதனைகளை கேட்டதுமில்லை. இயேசுவின் பணியை பேதுருவும், திருத்தூதர்களும் அறிவித்து வந்தனர். இதைக் கேள்விப்பட்டு இயேசுவை தனது மீட்பராக ஏற்றுக்கொண்டு அவரது பணிக்கென தனது வாழ்வை எடுத்துச் செல்லும் மாபெரும் நற்செய்தியாளராக உருமாறினார்.

புனித லூக்கா ஒரு கிரேக்கர், இவர் திருத்தூதர் பவுலோடு சேர்ந்து நற்செய்திப் பணியாற்றியவர். இகழ்ந்து ஒதுக்கப்பட்ட பாவிகள், ஏழைகள், சமாரியர் இவரால் மிகச் சிறப்பாக சிறப்பிக்கப்படுகின்றனர். அனைத்து திருத்தூதர்களிடமிருந்தும் இயேசுவைப் பற்றிய நிகழ்ச்சிகளையும் கேட்டறிந்து வரிசை மாறாமல் தொகுத்து வழங்கினார். அந்தந்தக் கால வரலாற்றை அவர் கூறும்போது இயேசுவோடு உடனிருப்பதாக உணர்ந்தார். முதல் கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர் என்ற பெயரைப் பெற்றவர். திருத்தூதர் பணி என்ற நூலை எழுதியவரும் இவரே. மேலும் வானதூதர்கள் கொடுத்த பலகைகளில் அன்னை மரியாளின் உருவத்தை வரைந்தவர். அவற்றில் ஒன்று புனிதத் தோமையார் அவர்களால் சென்னைக்கு கொண்டு வரப்பட்டு புனித தோமையார் மலையில் பாதுகாக்கப்பட்டு வருவதை இன்றளவும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். தனது 24வது வயதில் போவாதியா என்ற இடத்தில் மரணமடைந்தார். இங்குள்ள தீபஸ் பட்டணத்தில் வெண்பளிங்கு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். நாமும் புனித லூக்காவைப்போல நற்செய்திப் பணியை பரப்புவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. கனிவும் மனத்தாழ்வும் கொண்ட இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் தன் சொல்லிலும், செயலிலும் கனிவும், மனத்தாழ்ச்சியும் கொண்டவர்களாக தன் சொல்லிலும், செயலிலும், கனிவும், மனத்தாழ்ச்சியும் கொண்டு மக்களுக்கேற்ற எளிய தலைவர்களாக வாழவும், அவர்களின் உடல், உள்ளம் ஆன்மா அனைத்தும் வல்லமையோடும் நல் ஆரோக்கியத்தோடும் இருக்கத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. சுமை சுமந்து சோர்ந்திருப்போருக்கு ஆறுதல் தரும் இறைவா, மனவேதனையோடும், உடல் நோயோடும் மனபாரத்தோடும் திப்பலியில் பங்கேற்க வந்துள்ள ஒவ்வொருவரையும் மருத்துவராய் இருந்து நீர் நல்ல ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வழிகாட்டும் ஒளியாம் இறைவா, திருஅவையின் விழுதுகளாகிய இளம் தலைமுறையினர்கள் திருஅவை, திருப்பலி, வழிபாடு ஆகியவற்றில் எந்த ஈடுபாடும் காட்டாமல் வேலை, உழைப்பு, ஆடம்பரம், விழாக்கள் என்று மனம் போன போக்கில் அலைந்து திரிகின்றார்கள். அவர்களிடையே நீர் நல்ல மனமாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.10.2023 பொதுக்காலம் 29ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. எசா. 45: 1,4-6 II. 1தெச. 1: 1-5 மத். 22: 15-21

பொதுக்காலம் 29ம் ஞாயிறு திருப்பலியை இணைந்து சிறப்பிக்க இறைமக்களாகிய நாம் ஒன்று கூடியுள்ளோம். நாம் இந்த உலகில் மண்ணின்மீது வாழ்கின்றோம், திருஅவையும் உள்ளது, திருஅவை இருப்பதும் இயங்குவதும் இந்த உலகிற்காகவே, இதிலிருந்து தனித்து பிரிந்து ஒருபோதும் இயங்க இயலாது, முடியாது என்பதையே இன்றைய திருநூலின் திருவார்த்தைகள் மிக ஆழமாக நமக்கு எடுத்துரைக்கிறது. ஒன்று உழைப்பு, மற்றொன்று நம்பிக்கையாளர்களின் எதிர்நோக்கு, உழைப்பு என்பது முதலில் நமக்கானதாகவும் அதோடு சமூக அக்கறை பொது நோக்கம் கொண்டதாகவும் அமைய வேண்டும். இதனையே இன்று வலுவாக நேர்த்தியாக சுட்டிக் காட்டப்படுகிறது. இதில் பல சங்கடங்கள் சவால்களை நாம் சந்திக்கின்றோம். இருந்தாலும் புனித பவுலடிகளாரும் அவரோடு இணைந்த தோழமைகளும் கூறுவது, உழைப்பவர்களுக்கும் மனவுறுதியுடன் நம்பிக்கையோடு எதிர்நோக்கி காத்திருப்போருக்கும் நன்றி கூறி இறைவனிடம் வேண்டுகிறோம். இதுவே நல்ல செய்தி, இதனையே உங்களிடம் கொண்டு வந்து சேர்த்தோம் என்கின்றனர். நற்செய்தியிலும் அதற்குரியதை அவற்றிற்கே அளிப்போம் என இறையேசு நமக்கு கூறுகிறார். இதேபோன்று நாமும் நமக்காக மட்டுமின்றி இந்த உலகம் சமூகம் அனைத்திற்கும் உழைத்து திருத்தூதர்கள் பெற்ற வல்லமையை நாமும் பெற இத்திருப்பலியில் வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திருஅவை பணியாளர்களாகிய திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவற சபையின் துறவறத்தார்கள் அனைவரும் திருஅவையின் வளர்ச்சிக்காகவும் சமூக கட்டமைப்பின்

மாற்றங்களுக்காகவும் உழைத்து இறையாசீர் பெற்று எதிர்நோக்கோடு வாழ உமதாசீர் வழங்கி வழிநடத்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதி நிறைந்த இறைவா, அனைத்துலக நாட்டுத்தலைவர்கள் அவரவர் நாட்டு மக்கள் நலன்கருதி உண்மையான உழைப்பை கொடுத்து ஏற்றத்தாழ்வின்றி சமத்துவம் நிறைந்த சமூகமாக வாழ பலன்கொடுப்பவர்களாக இருக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. உண்மையே உருவான இறைவா, இந்தியாவும் தமிழ்நாடும் இங்குள்ள மக்கள் குடும்பங்கள் அரசு ஊழியர்கள், அதிகாரிகள், தனியார் அலுவலகங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள் பல நிலைகளில் பணிபுரியும் அமைப்பு சாரா தொழிலாளர்கள், விவசாயிகள் அனைவரும் அவரவர் தம் பொறுப்புணர்ந்து செயல்படவும் அவர்களின் உழைப்புக்கேற்ற அனைத்து உரிமைகளும் பெறவும் இதனால் அநீதியில்லா சமூகம் அமைந்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. தோழமையுணர்வு கொண்ட இறைவா, உம்மோடு திருத்தூதர்களை ஏற்படுத்தி இணைத்துக்கொண்டு உலகமெங்கும் மக்கள் நல்வாழ்வு வாழ ஊரெங்கும் தெருத்தெருவாக சுற்றி உழைத்தீரே, அதேபோல் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் மட்டுமின்றி ஒட்டுமொத்த மக்கள் அனைவரும் உழைத்து அன்பும், அறமும் நிறைந்த இறையாட்சி மலர உம்மை மன்றாடுகிறோம்.

## 24.10.2023 புனித லூயிஜி குவனெல்லா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

கடவுளின் அழைப்பைக் கேட்டு, இதோ வருகிறேன் என்று திருப்பாடல் ஆசிரியர் சொல்கிறார். கடவுள் விரும்புவது எது? கடவுளின் உண்மையான அழைப்பு எது? கடவுளின் திருவுளம் எது? இது போன்ற கேள்விகளை நமக்குள்ளே நாம் கேட்டுக்கொள்ள இன்றைய வாசகங்கள் நம்மை அழைக்கிறது. இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இறைவனின் அழைப்பை ஏற்று, அருட்பணியாளராக தனது இறைப்பணிகளில் செபத்தினாலும், தாழ்ச்சியினாலும் தூண்டப்பெற்று உறுதியுடன் வாழ்ந்த புனித லூயிஜி குவனெல்லா அவர்களின் விழாவை இன்று கொண்டாடுகிறோம். சலேசிய ஆன்மீகம் என்பது நற்செய்தியின்படி வாழ்வதாகும். தனது கத்தோலிக்க இளையோர் இயக்கத்தை ஆரம்பித்த பின் 1875ல் தூய தொன் போஸ்கோவின் சந்திப்பு இவரைக் கவர்ந்ததால் சலேசிய சபையில் சேர்ந்தார். மூன்று ஆண்டுகள் சலேசியராக பணியாற்றும் போது, ஆயரின் அழைப்புக்கேற்ப மீண்டும் தனது மறைமாவட்டத்திற்கு திரும்பினார். தனது இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் மூன்று துறவற சபைகளையும், ஒரு பொதுநிலை பக்த சபையையும் நிறுவி கனிவான இதயத்தாலும் இறைவனில்

அசைக்க முடியாத நம்பிக்கையினாலும் பிணைக்கப்பட்டு அர்ப்பணம் நிறைந்த தியாக பணிகளை செயல்படுத்தினார். அன்பர்களே, கடவுளை மாட்சிப்படுத்துவதற்கு நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். எவ்வளவு காலம் வாழ்ந்தோம் எந்தளவுக்கு நமது கடமையைச் சிறப்பாக செய்தோம் என்பதில்தான் நமது வாழ்வு அடங்கியிருக்கிறது. நம் வாழ்வு மூலமாக கடவுளைப் புகழ்வோம் என்பதை உணர்ந்து வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் ஆண்டவரே, எப்போதும் விழித்திருக்க வேண்டும் என்னும் உமது அறை கூவலுக்காக உமக்கு நன்றி. எல்லா வேளையிலும் உமது மதிப்பீடுகளைக் கடைப்பிடிக்கும் ஆற்றலை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எங்கள் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் உம் வருகை நிகழ்கிறது என்பதை நாங்கள் உணர தேவையான வரத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. இன்று நாங்கள் நினைவுகூறும் புனித லூயிஜி குவனெல்லாவின் பிறரன்பு பண்புகளை கடைப்பிடித்து, பிறரால் ஒதுக்கப்பட்ட, வன்முறைகளால் நொறுக்கப்பட்வர்கள் மீண்டும் புதிய நம்பிக்கையுடன் வாழ்வை எதிர்கொள்ளவும், நிறைவான அமைதியை பெற்றிட தேவையான உதவிகளை செய்யும் கனிவான உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 28.10.2023 புனிதர்கள் சீமோன், யூதா,திருத்தூதர்கள் விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

இறையேசுவின் அன்பு மக்களே, இன்று நாம் புனிதர்கள் சீமோன் மற்றும் யூதா திருத்தூதர்களின் விழாவை சிறப்பிக்கின்றோம். திருத்தூதர்களின் பெயர்களைப் பதிவிடும் புனித லூக்கா "தீவிரவாதி எனப்பட்ட சீமோன்" என குறிப்பிடுகின்றார். இவர் "சிறிய சீமோன்" எனவும் அறியப்படுகிறார். நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிடும் திருத்தூதர் பட்டியலில் சீமோன் பெயர் காணப்படுகிறது. ஆண்டவரின் விண்ணேற்புக்குப்பின் நற்செய்தியை முதலில் எகிப்தில் அறிவித்தவர் சீமோன். பின்னர் யூதா ததேயுவுடன் சேர்ந்து மெசபடோமியாவிலும்,

பெர்சியாவிலும் இவர் போதித்தார். யூதா ததேயு இயேசுவின் சகோதரர் என்று அறியப்படுகிறார். புனித லூக்கா திருத்தூதர்களை இறையாட்சிப் பணிக்குத் தேர்ந்தெடுத்து அவர்களின் பெயரைக் குறிப்பிடுவதன்மூலம் அவர்களின்மீது ஆண்டவருக்கு இருந்த உரிமையை உறுதிப்படுத்துகிறார். சீமோன், யூதா, ததேயு இவ்விருவரும் பெர்சியாவில் நற்செய்தியை மக்களுக்கு அறிவித்துக் கொண்டிருக்கும்போது கொல்லப்பட்டு இறையாட்சியைப் பகர்ந்தனர். இவர்களின் வாழ்வும் இறப்பின் வழியாக நாமும், "இறையாட்சியின் தூதுவர்களாக வாழ்வோம்" என்னும் மன உறுதியுடன் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. குருத்துவத்தின் நாயகனே எம் இறைவா, இறைப்பணியைத் தம் வாழ்வாக ஏற்று வாழும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் தாம் ஏற்ற இறைப்பணியை சிறப்பாக செய்து இறையன்பிலும், இறைவன் வழியில் உம் மந்தையை வழிநடத்தத் தேவையான ஆற்றலை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. படைப்பின் ஆற்றலே எம் இறைவா, உம் சாயலாகப் படைக்கப்பட்ட இம்மாமனித குலம் பிறர் உணர்வுகளை மதித்தும், மனித நேயத்தோடு வாழவும் வேண்டிய சிறந்த குணங்களுடன் இருக்கத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. நீதியின் தேவனே, நம் நாட்டையும், மாநிலங்களையும், கிராமங்களையும் நிர்வாகம் செய்யும் தலைவர்கள், சுயத்தேவைகளுக்காக மட்டும் வாழாமல் மக்களின் நலனுக்காக வாழ்ந்து சிறந்த ஆட்சி புரிந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. நோய்களை குணமாக்கும் மருத்துவரே, இப்பருவக் காலத்திற்கேற்ப பரவும் பலவிதமான தொற்று நோய்களில் இருந்தும், மனக்கவலையிலிருந்தும் எங்களைப் பாதுகாக்கும் புகலிடமாய் இருக்கும் உம்மிடம் எங்களுக்காக அனைத்து நோய்களிலிருந்தும் காப்பாற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.10.2023 பொதுக்காலம் 30ம் ஞாயிறு மற்றும் அருளாளர் ரூவா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. வி.ப. 22: 21-27 II. 1தெச. 1:5-10 மத். 22: 34-40

சமுதாயத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களோடு வாழும் சகோதர சகோதரிகளே, இன்று திருஅவை பொதுக்காலத்தின் 30ம் ஞாயிறை சிறப்பிக்க அழைக்கின்றது. இயலாமையில் வாழும் கைம்பெண்கள், அனாதைகள், ஆதரவற்றவர்கள், பெண்கள், குழந்தைகள், புலம்பெயர்ந்தவர்கள் போன்றவர்களை இந்தச்

சமுதாயம் பயன்படுத்தித் தூக்கி எறியப் பார்க்கிறது. உன்மீது உன்முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும் அன்பு செய்ய நினைக்கும்போது அடுத்தவரை அதே மனம், இதயம், உள்ளம், என அன்பு செய்ய மறுக்கிறது? அடுத்தவரின் இயலாமையை ஆதாயமாக்குவதைவிட, உண்மையாக அன்பு செய்ய முற்படுவோம். இந்த உலகில் எளிதில் கிடைக்கக்கூடிய ஒன்று உண்மையான அன்பு, மற்ற அனைத்தும் எளிதில் கிடைத்து விடுகிறது. எனவே, அன்பிற்காக ஏங்கும் மனிதர்களை அன்பு கொண்டு ஏமாற்றுவதைவிட அன்பை அடுத்தவருக்கு அனுபவமாக்கி ஆழ்மனத்தில் இடம் பிடிக்க வேண்டும். அன்பே அனைத்தும் என வாழ்க்கையின் பொருள் உணர்ந்து நம் ஆற்றலாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்ந்து, மூவொரு கடவுள் நம்மிடம் வந்து குடிக்கொள்ள நம்மைத்தகுதி உள்ளவர்களாக மாற்றிக் கொள்வோம். மிகுந்த வேதனை நடுவிலும் தூய ஆவி அருளும் மகிழ்வோடு நடந்து, நம்பிக்கைக் கொண்டோர் அனைவருக்கும் முன்மாதிரியாக வாழ்வோம் என உறுதிக்கொண்டு பக்தியோடு பிறரன்புத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆற்றலாகிய ஆண்டவரே, அன்பே அனைத்தும் என்று உணர்ந்து வாழ்ந்துக்கொண்டிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசு கிறிஸ்துவின்மீது அன்பு கொண்டு அவர் சொல்வதை கடைப்பிடித்து வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. பிறர்மீது அன்பு காட்டச் சொன்ன இறைவா, நெருக்கடியான காலத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாங்கள் இறை நம்பிக்கையுடன் செபித்து, குடும்பங்களிலும், மணிப்பூரிலும், உலகமனைத்திலும் அமைதியும், ஒற்றுமையும், சமாதானமும் நிலவத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இறையாட்சியின் நாயகனே இறைவா, எம் தாய் நாட்டிலும் உலகிலும் இயேசுவின் படிப்பினைகளின்படி வாழும் மக்களை இரக்கத்துடன் கண்ணோக்கி வழிநடத்தத் தேவையான தலைமைப் பண்புள்ளவர்கள் உருவாக அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, இளைஞர்கள், இளம் பெண்கள், மாணவ மாணவியர் தங்களின் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் மதித்து இறையரசுப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய ஞானத்தையும், அறிவையும் தந்து தூய ஆவியாரின் வழிகாட்டலில் கிறிஸ்தவ சாட்சிய வாழ்வை வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## இறைவன் தந்த வானதூதர்கள்

திரு. பி. விக்டர்

இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டுக்கென படைவீரர்களை வைத்துள்ளனர். இவர்களது முக்கியமான பணி நாட்டைப் பாதுகாப்பதாகும். நாட்டில் நடக்கும் கலவரங்களை அடக்குவதற்கும் மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கை பேரழிவுகள் நடக்கும் வேளைகளில் மக்களை இடர்பாடுகளிலிருந்து பாதுகாப்பதும், உள்நாட்டு கலவரங்களை அடக்கி அமைதி ஏற்படுத்துவதும் இப்படை பயன்படுகிறது. மக்களைத் தீவிரவாதிகளின் பிடிகளிலிருந்து விடுவித்து காப்பதும் இப்படைகளின் பணிகளாகும். இவ்வாறு நாட்டின் தேவைகளுக்கேற்ப இப்படையில் பல பிரிவுகளும் உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கேற்ப அவர்களது பணியும் வேறுபடும். நமது விண்ணகத் தந்தையும் இந்த அகில உலகையும் ஆளுகிறவராக இருக்கிறபடியால், தனக்கென ஒரு படையை வைத்துள்ளார். அவர்களுக்கு வான தூதர்கள் என்று பெயர். இவர்களது பணி தந்தையாம் கடவுளை ஆராதிப்பதும் அவருக்குப் பணி செய்வது மொத்தத்தில் இவர்கள் "பணிபுரியும் ஆவிகள்" (எபி.1:14). இவர்கள் உலகில் உள்ள படைவீரர்களைப் போல் அல்லாமல் கடவுளின் மீட்புத்திட்டத்திற்கு உதவி புரிவதையே பணியாகக் கொண்டுள்ளனர்.

### வானதூதர்களின் பிரிவுகள்

உலகில் காணப்படும் படைகளின் பிரிவுகளைப் போன்று வானத் தூதர்களின் பிரிவுகளும் உண்டு. தோபியா புத்தகத்தில் இரபுயேல் என்கிற வானதூதர் மகன் தோபியாவுக்கு உதவி செய்வார். அவருக்கு அன்பளிப்பு கொடுக்க விழையும்போது அவர்தான் கடவுளுக்கு முன்பாக நிற்கும் இரபேல் வானதூதர் என்றும் கடவுளின் ஏழு வானதூதர்களின் தலைமையில் மிகப் பெரிய வானதூதர் கூட்டம் இருப்பதையும் அறிவிக்கின்றார். இவ்வாறு ஏழு வானத்தூதர் பிரிவு இருப்பதை திருவெளிப்பாட்டில் தூய யோவான் பல இடங்களில் தெரியப்படுத்துகிறார். கடவுளின் அரசில் கோடிக்கணக்கான வானத்தூதர்கள் உண்டு இவர்களில் ஏழு தலைமைத் தூதர்களும் உண்டு.

மிக்கேல், கபிரியேல், இரபேல், உரியேல், ரெனியேல், சரக்வாயேல், இரகுயேல் இவர்களில் மூன்று தலைமைத் தூதர்களைக் குறித்து மட்டுமே திருவிவிலியத்தில் குறிப்புகள் உள்ளன. உதாரணமாக கபிரியேல் அதிதூதர் அன்னை மரியாளுக்கு இயேசுவின் பிறப்புச் செய்தியையும் சக்கரியாவுக்கு திருமுழுக்கு யோவானின் பிறப்பு செய்தியையும் அறிவிக்கின்ற பணியைச் செய்கின்றார் (லூக்.1:28). மிக்கேல் அதிதூதர் போர்புரியும் இரயேல் அதிதூதர் தொபியாவின் மகன் தோபிதுக்கு உதவி செய்து அவர் திருமணம் செய்து நலமுடன் வாழ உதவி செய்கின்றார் (தொபி.12:15). தீய ஆவிகளை

விரட்டி தோபி நலமுடன் இருக்க உதவுகிறார். இவர்களோடு சேராபீன்கள் என்கிற வானதூதர் கூட்டம் ஆண்டவரை ஆராதிக்கிறவர்களாக செயல்படுகின்றனர். (எசா. 6: 6-7) மற்றும் சேராபின்கள் என்கிற வானதூதர் கூட்டம் காவல்காக்கும் தூதர்களாகச் செயல்படுகின்றனர் (திபா. 80:1)

## உரிமை மிக்கவர்கள்

இறைவனோடு இருக்கிற வானதூதர்கள் ஆண்டவரின் சொல் கேட்டு நடக்கிறவர்கள். அதே நேரம் வலிமை மிக்கவர்கள் (திபா. 103:20). வானதூதர் கொடுத்த உணவை உண்ட எலியா நாற்பது இரவும் பகலும் இடைவிடாமல் நடந்து பயணம் செய்ய முடிந்தது. அப்படியானால் எத்தகைய உணவை அவர் உண்டிருக்க வேண்டும் (1அர 19: 5-7) மனிதர்கொடுக்கும் உணவு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களே தாங்கும். ஆனால் வானதூதரின் உணவு எலியாவை வலிமை பெற வைத்து, கடவுள் தம் வானதூதர்களைக் காற்றுகளாகவும் தம் பணியாளரை தீப்பிழம்புகளாகவும் செய்கிறார் (எபி. 1:7) ஒருமுறை ஆசிரிய மன்னனின் படைத்தளபதி இராச்சாகே இஸ்ரயேலரின் கடவுளைப் பழித்துப்பேசி எசேக்கியா அரசனுக்கு தூது அனுப்பி சரணடையச் சொல்கின்றான். எசேக்கியா அரசனோ இறைவனிடம் மண்டியிட்டு மன்றாடினார். தன்னையும் தனது படையனைத்தையும் ஆண்டவரிடம் ஒப்படைத்தார். எனவே ஆண்டவர் தம் தூதர்களில் ஒரு தூதனை அனுப்பி, அசிரியனின் பாலையத்தினுார் அசீரிய வீரர்களைக் கொன்றார். விடிந்து பார்த்தபொழுது ஒருவனையும் உயிரோடு பார்க்க இயலவில்லை (2அர 19:35). இதிலிருந்து ஒரு வானதூதரின் வலிமைபுரிகிறது. உலகின் நான்கு மூலைகளிலும் நான்கு வானதூதர்கள் நின்று உலகின்மீதும், கடலின்மீதும் காற்று வீசாதவாறு காற்று வகைகள் நான்கினையும் அவர்கள் கட்டுப்படுத்தி வைத்திருந்தனர். இதிலிருந்து வானதூதர்கள் எவ்வளவு வலிமையுடைய வீரர்கள் என்பதை அறிய முடிகிறது.

## வானதூதர்கள் ஆண்டவரை ஆராதிக்கிறவர்கள்

உயர்ந்த அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருக்கிறார். அவருக்கு மேல் சேராபீன்கள் சூழ்ந்து நிற்கிறார்கள். அவர்கள் அனைவரும் "படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர் மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியில் நிறைந்துள்ளன என்று உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தனர் (எசா. 6: 2,3). இவ்வாறு ஆண்டவரை ஆராதிக்கிற வானதூதர்கள், அவருடனே வாழ்கின்றனர். ஆண்டவர் எங்கெல்லாம் வருகிறாரோ, அங்கெல்லாம் வான தூதர்களும் இறங்கி வருகின்றனர். உதாரணமாக, உலக முடிவில் கடவுள் உலகை நீதித் தீர்ப்பு செய்ய வரும்போது வானதூதர்களும் அவருடனே கூட வருவார்கள். கடவுளின் தூதர் அனைவரும் அவரை வழிபடுகின்றனர். தன்னை துதிப்பதற்கும் தனக்கு பணிவிடை செய்வதற்கும் மட்டுமே வானத்தூதர்களை கடவுள்

படைத்துத் தன்னுடன் வைத்துள்ளார். தனக்கு பணிந்து நடக்கும் தூதர்களாக அவர்களை வைத்துள்ளார். விண்ணகத்தில் வானதூதர்கள் அனைவரும் அரியணைமுன் முகம் குப்புற விழுந்து கடவுளை வணங்கினார்கள் ஆமென். புகழ்ச்சியும், பெருமையும், ஞானமும், நன்றியும், மாண்பும், வல்லமையும், வலிமையும் எங்கள் கடவுளுக்கே என்றென்றும் உரியன ஆமென் என்று பாடினார்கள். இவ்வாறு வானதூதர்களின் மிக முக்கியமான பணி ஆண்டவரை ஆராதிப்பதே.

**வானதூதர்கள் நமக்கு உதவி செய்ய பணிக்கப்படுகிறார்கள்**

வானதூதர்கள் அனைவரும் ஊழியம் புரியும் ஆவிகள். மீட்பை உரிமைப்பேராகப் பெறுவோருக்கு தொண்டாற்ற அனுப்பப்பட்டவர்கள் (எபி.1:11). அதாவது கடவுளின் மீட்பைப் பெறப்போகிற மனிதர்களுக்குத் தொண்டாற்ற அனுப்பப்பட்டவர்கள். பண்டைகாலத்தில் சோதோம், கொமேரா நகர்களின் அழிவின் வேளையில் சோதோமில் குடியிருந்த லோத்தையும் அவரது குடும்பத்தையும் காப்பாற்ற ஆண்டவர் தூதர்களை ஏவியதை நாம் அறிவோம். ஆபத்து வேளைகளில் ஆண்டவரை நோக்கி கூப்பிடும்போது அவர் தமது தூதர்களை அனுப்பி நம்மை விடுவிக்க வல்லவராய் இருக்கிறார். கடவுளின் தூதர்கள் நாம் செல்லும் இடமெல்லாம் நம்மைக் காக்கும்படி கட்டளை பெறுகிறார்கள். எனவே நமது கால்கள் கல்லின்மேல் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளில் நம்மைத் தாங்குகின்றனர். (திபா. 91:11-12). தானியேல் கொடிய சிங்கங்கள் மத்தியில் போடப்பட்டார். கடவுளை உண்மையாய் ஆராதித்ததினால் அவரது எதிரிகள் தந்திரமாகச் செயல்பட்டு தாரியு அரசனை ஏமாற்றி தானியேலைச் சிங்கக் குகையில் போட வைத்தனர். ஆனால் ஆண்டவரை தனது உண்மை ஊழியன் தானியேல் காப்பாற்றத் தனது வானதூதரை அனுப்பி வைத்து சிங்கங்களின் வாய்களைக் கட்டிப்போட்டார்.

திருஅவையில் தொடக்கக் காலத்தில் திருத்தூதர் யாக்கோபுவை ஏரோது அரசன் கொலை செய்கிறான், இது யூதர்களுக்கும், தலைமைக்குரு, பரிசேயர், சதுசேயர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. எனவே திருத்தூதர் பேதுருவையும் கொலை செய்யும் நோக்கில் கைது செய்து சிறையிலடைத்தான். நம்பிக்கையாளர்களோ அவரது விடுதலைக்காக ஆண்டவரிடம் மன்றாடினர். எனவே பேதுரு கொலைசெய்யப்பட தீர்மானிக்கப்பட்ட நாளுக்கு முந்தின இரவில் ஆண்டவர் தம் தூதரை சிறைச்சாலைக்குள் அனுப்பிவைக்கிறார். வானதூதர் தாங்கிக்கொண்டிருந்த பேதுருவைத் தட்டி எழுப்புகிறார். உடனே விலங்குகள் சுழன்று விழுகின்றன. சிறைக்கூட கதவு தானாகத் திறக்கிறது.

வானதூதர் பேதுருவை சிறைக்கு வெளியே அழைத்து வருகின்றார். நகர வாயிலின் இரும்புக் கதவும் தானாகத் திறக்கிறது.

பேதுரு முழுவதுமாக விடுவிக்கப்பட்டுத் தன் மக்களிடம் செல்கின்றனர், கடவுளுக்கு நன்றி சொல்கின்றனர். நமக்கென நியமிக்கப்பட்டுள்ள வானதூதர்கள் விண்ணகத் தந்தையாம் கடவுளின் திருமுன் எப்பொழுதும் இருப்பதாக இயேசுவே தெரிவித்துள்ளார் (மத். 18:10).

**உலக முடிவில்**

உலக முடிவில் மானிட மகன் வரும்பொழுது, தம் மாட்சியோடு வருவார். அப்போது வான தூதர்களும் அவருடன் வருவார்கள் (மத். 8:38). உலக முடிவில் மானிடமகன் தம் வானதூதரை அனுப்புவார். அவர்கள் மானிட மகனுடைய ஆட்சிக்குத் தடையாக உள்ள அனைவரையும் நெறிகெட்டோரையும் ஒன்று சேர்த்துத் தீச்சூளையில் தள்ளுவர் (மத்.13:41). உலக முடிவின் நாட்களில் வானதூதர்கள் அனைவரும் படைசூழ மானிட மகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். வானதூதர்களால் எல்லா மக்களும் ஒன்று கூட்டப்படுவர். அவரது வலது பக்கத்தில் நல்லவர்களையும், இடது பக்கம் தீயவர்களையும் நிறுத்துவர். வலது பக்கமுள்ளவர் நிலைவாழ்வுக்கும் இடது பக்கமுள்ள தீயவர்கள் அணையாத நெருப்புக்கும் அனுப்பப்படுவர் (மத்.25: 31.41). இவ்வாறு வானதூதர்கள் கடவுளோடு எப்போதும், எல்லாச் சூழல்களிலும், இறுதிவரையிலும் இருக்கிறவர்களாக இருக்கிறார்கள். அவருக்குப் பணி செய்கிறார்கள். இவர்களை நினைவுகளைப் பகிர்ந்துக்கொள்ளும் நாமும் நம் வாழ்வின் எல்லா நாட்களிலும் கடவுளோடு இருக்கிறவர்களாகவும் அவருக்குப் பணிந்து நடக்கிறவர்களாகவும் வாழ்வோம். ஆண்டவர் நம்மைத் தம் ஆசீரால் நிரப்புவர்.

## அருளாளர் அகுஸ்தீன் தேவாரம் பரம்பில் - வாழ்வு தரும் பாடம்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

இந்தியத் திருஅவை அக்டோபர் 16ந்தேதி, அருளாளர் அகுஸ்தீன் தேவாரம் பரம்பில் நினைவைச் சிறப்பிக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வை மேம்படுத்த கிறிஸ்து விடுத்த அழைப்புக்கு செவிமடுத்ததால் இவர் ஓர் அருளாளராகத் திகழ்கின்றார். ஆண்டவர் இயேசுவைப் போன்று, சென்ற இடமெல்லாம் நன்மை செய்வதையே தமது வாழ்வின் இலக்காகக் கொண்டிருந்தார் என்றால் அது மிகையாகாது. தாழ்த்தப்பட்டோரின் மாண்பை உயர்த்தவே சுமார் ஐம்பது ஆண்டுகளைச் செலவிட்ட இவர், அவர்களின் துயரங்களைப் போக்கத் தம்மால் இயன்ற அளவுக்கு உழைத்தார். நமது நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற்றமடைய உழைத்த முன்னோடிகளில் ஒருவராக இவர் திகழ்கிறார்.

கேரளாவின் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ராமபுரம் கிராமத்தில், உயர் வகுப்பைச் சார்ந்த இட்டி லிப்பே - எலிஸ்வா

ஆகியோரின் மகனாக 1891 ஏப்ரல் 1ந்தேதி அகுஸ்தீன் பிறந்தார். திருவிதாங்கூர் அரசு பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கிய இவர், மன்னானம் பகுதி புனித எப்ரேம் பள்ளியில் உயர் படிப்பைத் தொடர்ந்தார். அங்கு பயின்ற வேளையில் கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதி அடைந்து, இறையழைத்தலை உணர்ந்ததால் குருத்துவ வாழ்வைத் தேர்வு செய்தார். பள்ளிப் படிப்பை முடித்ததும், செங்கனாச்சேரிக்கு நடந்தே சென்று புனித தோமா இளம் குருமடத்தில் சேர்ந்து பயின்றார். பின்னர் புத்தன்பள்ளி உயர் குருமடத்தில் பயிற்சியை நிறைவு செய்த இவர், 1915 ஜூலை 16ந்தேதி குருவாகத் திருப்பொழிவு பெற்றார்.

குருத்துவ வாழ்வின் முதல் எட்டு ஆண்டுகளில், அகுஸ்தீன் தமது சொந்த கிராமமான ராமபுரத்தில் தங்கி நடைமுறை பயிற்சி மேற்கொண்டார். உயரம் குறைந்தவராக இருந்த இவரை மக்கள், "குஞ்சச்சன்" (சிறிய தந்தை) என்று அன்போடு அழைத்தனர். 1923ல் கொடநாடு புனித செபஸ்தியார் ஆலயத்தில் உதவி பதிலராக நியமனம் பெற்றார். அங்கிருந்த வேளையில், சுற்றுப்புற கிராமங்களில் வாழ்ந்த விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெறுவதற்கு ஆலோசனை மற்றும் ஆசி பெறுவதற்காக இவரை நாடிச் சென்றனர். அவர்களது வயல்களுக்குச் சென்று, விளைச்சல் பெருகுமாறு செபித்து பயிர்கள்மீது புனிதநீரைத் தெளித்து ஆசி வழங்கினார். சிறிது காலத்திற்கு பிறகு உடல்நலம் குன்றியதால் இவர் ராமபுரம் திரும்பினார்.

ராமபுரத்தில் வாழ்ந்தபோது தாழ்ப்பட்ட மக்கள் தங்கள் மாண்பு, மரியாதை மற்றும் உரிமையை இழந்து தவித்ததைக் கண்டு வருந்தினார். அவர்கள் வாழ்வாதாரத்துக்கு தேவையான எதையுமே பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்ததை அறிந்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உறுதியேற்றார். உயர் வகுப்பு மக்களால் ஒடுக்கப்பட்டிருந்த அவர்களது பொருளாதார நிலை உயரத் தேவையான உதவிகளைச் செய்தார். சாதியத்தின் அடிப்படையில் பிளவுபட்டுள்ள இந்திய சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களும் முன்னேற வேண்டும் என்பது அவரது கனவாக இருந்தது. அதற்கு செயல் வடிவம் கொடுக்கத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதால், ஏறக்குறைய ஐயாயிரம் தாழ்த்தப்பட்டோர் இவரிடம் திருமுழுக்கு பெற்றனர்.

ஏழை, எளிய மக்கள் நடுவே பணியாற்றிய அருள்தந்தை அகுஸ்தீன் தமது வாழ்வையும் எளிமையாக அமைத்துக் கொண்டார். உயர்ந்த வகுப்பில் பிறந்தவர் என்றாலும், தாழ்த்தப்பட்ட மக்களோடு தம்மை இணைத்துக் கொண்டார். குருத்துவ வாழ்வின் பெரும்பகுதி ஆண்டுகளைத் தாழ்த்தப்பட்ட மக்கள் மாண்புடன் வாழவும், பொருளாதாரத்தில் வளர்ச்சி காணவும் உழைத்தார். இவரது அர்ப்பணமும், பிறரன்பு செயல்களும், மனிதநேயமும், சமூகத்தில் ஒடுக்கப்பட்டோர்

உரிமை வாழ்வைப் பெறுவதற்கு வழியாக அமைந்தன. கடினமாக உழைத்து தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படுத்திய இவர், அவர்களின் கல்லறைத் தோட்டத்திலேயே தமது உடல் புதைக்கப்பட வேண்டும் என்று முழுமனதுடன் விரும்பினார்.

தாழ்த்தப்பட்டோரின் மாண்பை உயர்த்த தம்மை அர்ப்பணித்த அருள்தந்தை அகுஸ்தீன், வாழ்வின் இறுதியில் சிறிது காலம் உடல்நலக் குறைவால் துன்புற்றுப் பிறகு 1973 அக்டோபர் 16ந்தேதி இறையடி சேர்ந்தார். ஆண்டவர் இயேசுவின் வழியில் ஒடுக்கப்பட்ட மக்களோடு தம்மை இணைத்துக் கொண்டு புனிதமாக வாழ்ந்த இவரை, மக்கள் புனிதராகப் போற்றிக் கொண்டாடினர். இதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த ஓர் அதிகாரப்பூர்வ புதுமை அடிப்படையில், 2006 ஏப்ரல் 30ந்தேதி இவர் அருளாளர் என்று அறிவிக்கப்பட்டார். சமூகத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள மக்களின் முன்னேற்றத்துக்காகவும், சாதியத்தால் பிளவுபட்டுள்ள கிறிஸ்தவச் சமூகங்கள் மனந்திரும்பவும் இவர் கடவுளிடம் தொடர்ந்து பரிந்துபேசி வருகிறார் என்பது உண்மை.

அருளாளர் அகுஸ்தீன் வாழ்வில் இருந்து நாம் மூன்று பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். முதலாவதாக விவசாயப் பயிர்களின் நல்ல விளைச்சலுக்காக விசுவாசத்தோடு இவர் செபித்து ஆசி வழங்கியதைப் போன்று, நமது வாழ்க்கையில் நன்மைகள் நடக்க நாம் கடவுளின் உதவியை நாடப் பழகுவோம். இரண்டாவதாக தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காக இவர் உழைத்ததைப் போன்று, சமூகத்தில் தாழ்நிலையில் இருக்கின்ற நமது சகோதர சகோதரிகளின் முன்னேற்றத்துக்கு நாம் உதவி செய்ய முயல்வோம். மூன்றாவதாக, கல்லறைகளில் கூட சாதியப் பாகுபாடு காணும் இழிந்த மனநிலையில் இருந்து விடுபட்டு, சமத்துவ, சகோதரத்துவ சமூகத்தின் வழியாக இயேசு விரும்பிய இறையாட்சியை இம்மண்ணில் நிறுவுவோம்.

அருளாளர் அகுஸ்தீன் தேவாரம் பரம்பிலைப் போன்று, பிறரன்பு வாழ்வால் கிறிஸ்துவுக்கு சான்றுபகர நாம் உறுதியேற்போம். செபத்தினால் மட்டுமின்றி, நமது சேவையினாலும் இவ்வுலகில் மாற்றத்தைக் கொணர இயேசு விடுத்த அழைப்பை வாழ்வாக்கியவர் இந்த அருளாளர். இவரது வழியில் இந்தியக் கிறிஸ்தவர்கள் நடைபயின்றால், இந்நாட்டு மக்கள் சமூகத்தில் மாபெரும் மாற்றங்கள் நிகழ்வது உறுதி. சாதி மற்றும் சமயத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தும் நிலை மாறினால் மட்டுமே, இயேசுவின் இறையாட்சிக் கனவு இவ்வுலகில் நனவாகும். பிறசமய தாழ்த்தப்பட்ட மக்கள் பெறும் இடஒதுக்கீட்டு உரிமைகள் தலித் கிறிஸ்தவர்களுக்கும் வழங்கப்பட உதவுமாறு அருளாளர் அகுஸ்தீனின் பரிந்துரையை நாம் வேண்டுவோம்.

# அருளாளர் அலெக்சாண்ட்ரீனா வரலாறு அறிவோம்

திரு. ஜான் அலெக்ஸ்

போர்த்துக்கல் நாட்டின் பாலசார் என்னும் கிராமத்தில் 1904ம் பிறந்த இவரின் வாழ்வினை இரண்டு பகுதிகளாகப் பிரித்து பார்க்கும் போது, 19 ஆண்டுகள் மகிழ்ச்சியாக ஆடிப்பாடிய உல்லாச வாழ்வும் 32 ஆண்டுகள் இயேசுவின் பாடுகளோடு தனது சிலுவைகளை, மகிழ்வோடு சுமந்த வாழ்வும் வெளிப்படுகிறது. தனக்கு 6 வயதானபோது மறைக்கல்வி கற்று, ஏழாவது வயதில் புதுநன்மை வாங்கியவர். ஆலயங்களில் வைத்துள்ள திருசுரூபங்களை சென்று பார்ப்பது இவருக்கு மிகவும் பிடித்த ஒன்று. குறிப்பாக அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் மரியன்னை, சூசை இவர்களின் திருச்சுரூபங்களை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருப்பார். "இது என் தற்பெருமையின் வெளிப்பாடு, நான் புனிதர்களின் புனிதத்துவத்தைப் பற்றி அவ்வளவு சிந்திப்பதில்லை. சின்ட்ரில்லாவைப் போல் பல ஏழைப் பெண்களும், அரசகுமாரர், அரண்மனை என்று ஆடம்பர வாழ்வை பற்றி சிந்திப்பது போல நானும் கனவு கண்டு கொண்டிருக்கிறேன்" என்று இவரே எழுதியதை நம்மால் காணமுடிகிறது.

**இளம் புயல் :** அலெக்சாண்ட்ரீனா மிக சுறுசுறுப்பானவர், துடுக்குத்தனம் மிக்கவர். சின்ன மான் குட்டியைப்போல இங்கும் அங்கும் ஓடுவதும் ஆடுவதுமாய் இருப்பவர். அன்றாட வாழ்வில் நடக்கும் வேடிக்கை நிகழ்வுகளை கண்டு மகிழ்வார். ஒருமுறை ஆலயத்தில் செபித்துக்கொண்டிருக்கும் இருவரின் மேலாடைகளை முடிச்சுப்போட, அவர்கள் அதை அவிழ்க்க முடியாமல் தவித்ததைக் கண்டு சிரிப்புடன் வெளியே ஓடிவந்தார். ஆகவே இவரின் குறும்புத்தனத்துக்கு எல்லையே கிடையாது. அவர் எப்போதும் மகிழ்ச்சியாய் இருப்பார். அதோடு தன் கடமையில் கண்ணும் கருத்துமாய் இருப்பார். விறகுக் கட்டைகளை உடைப்பதும், நீரோடைக்கு சென்று துணிகளைத் துவைப்பதும் அவரது பொழுதுபோக்கு. "தூய்மை" என்பது அவரோடு ஒட்டிப்பிறந்த பண்பு என்றால் அது மிகையல்ல. தூய்மையற்ற ஆன்மாவையும் உடலையும் இறைவன் ஒருபோதும் விரும்புவதில்லை என்பதில் உறுதியாய் வாழ்ந்தார்.

**குடும்ப பாரத்தைத் தாங்கும் சுமைதாங்கி :** தன் 13வயதில் கடுமையாக உழைக்கும் தன் தாயோடு பணிக்கு சென்றார். தாய்க்கு நிகராக திறமையோடு பணியாற்றியதால் இவருக்கு பெரியவர்களுக்கு கொடுக்கப்படும் அதே கூலி தரப்பட்டது. பலம் வாய்ந்தவர்களைப் போல பலுவான சோள மூட்டைகளைத் தானே தனியாக தூக்கி செல்வார். இதனால் மணமான ஒருவன் இவரிடம் தகாதமுறையில் நடந்து கொண்டதால் துணிச்சலோடு ஓங்கித் தாக்கினார். வேறொரு முறை பணக்கார இளைஞன் இவரைத் தன் வலைக்குள் இழுக்க முயற்சித்துத் தோல்வி கண்டான்.

**செதுக்கி வைத்த அழகுச்சிலை :** அலெக்சாண்ட்ரீனாவிற்கு 14 வயது, அழகுப் பொலிவுடன் திகழ்ந்தவர், தன் தங்கையுடனும் தோழியுடனும் வீட்டில் இருந்தார். தன்னிடம் அறை வாங்கியவன் இரு கூலியாட்களோடு வீடு புகுந்தான். அனைவரும் ஓடி மறைந்துகொண்டனர். இருப்பினும் கதவை உடைத்துக் கொண்டு மூவரும் உள்ளே நுழைந்தனர். தன் தங்கை, தோழியை தாக்க முயன்றபோது தடுத்தார். அவர்கள் அலெக்சாண்ட்ரீனாமீது தங்கள் கண்களை திருப்பினார்கள். உடனே இவர் பக்கத்திலிருந்த சன்னல் கதவு வழியாக மாடியிலிருந்து குதித்தார். பிறகு அங்கிருந்த ஒரு கட்டையை எடுத்துக் கொண்டு அவர்களை அடித்து தன் தங்கை மற்றும் தோழியை காப்பாற்றியவருக்கு சொல்ல முடியாத அளவு முதுகு வலி. படுத்தவர் மீண்டும் எழவே முடியவில்லை. முதலில் தன் நோயை ஏற்றுக் கொள்ளவில்லை. வேதனையோடு பல தூரம் சென்று சிகிச்சை பெற்றுவந்தார்.

இறைவனை நோக்கி பக்தியோடு தனக்கு நற்சுகம் கிடைத்தால் வாழ்நாளெல்லாம் தான் அணியும் அழகிய ஆடைகளுக்கு பதில் எளிய உடைகளை உடுத்துவதாக வாக்குறுதி தந்தார். இருப்பினும் அவரது உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது. தனக்கு பக்கவாதம் வந்திருப்பது உறுதியானது. தன் 19ம் வயதில் படுக்கையில் படுத்தவர் 30 ஆண்டுகளாய் படுக்கையே அவரது வாழ்வாக மாறிவிட்டது. துடிப்பும் பளபளக்கும் அவரது மேனியும் பயனற்ற எலும்பும் தோலுமாக மாறி, அசைவற்ற கட்டையாக மாறியது. காலப்போக்கில் அலெக்சாண்ட்ரீனாவிற்கு தான் சுகம்பெற வேண்டும் என்பதை விட இயேசுவுக்காக, ஆன்மாக்களை மீட்பதற்காகவே தனது துயரங்களை ஒப்புக்கொடுத்தார்.

**இயேசுவின் திருப்பாடுகளில் அலெக்சாண்ட்ரீனா :** பாவிகளின் மனமாற்றத்திற்காகவும் உலக அமைதிக்காகவும் பயனற்ற தன் உடலை மறை உடலாக மாற்றி பலிப் பொருளாக இறைவனுக்கு கையளித்தார். துன்பப்படுவதும் பரிகாரம் செய்தலும் அன்பின் வெளிப்பாடு என்று இயேசு அவருக்கு உணர்த்தினார். 1936ல் "எனக்காக ஆன்மாக்களைக் காப்பாற்று" என்ற இயேசுவின் குரல் அவருக்கு கேட்டது. பங்குத்தந்தை தினமும் நற்கருணை எடுத்து வந்தார். 1938ல் தன் உடலில் இயேசுவின் பாடுகளை முதன் முதலாய் அனுபவித்தார். அதுமுதல் 1942 வரை ஒவ்வொரு வெள்ளியன்றும் 3 மணி நேரம் இயேசுவின் பாடுகளை தன் உடலில் அனுபவித்தார். 1942ம் ஆண்டு இவருக்கு இறுதி அருட்சாதனம் நிறைவேற்றப்பட்டது. அதுமுதல் 1955 அக்டோபர் 13ம்நாள் வரை நற்கருணை ஒன்றையே உணவாக அருந்தினார். அதுமட்டுமல்ல திருத்தந்தை 12ம் பத்திநாதரிடம் இவ்வுலகை மரியன்னையின் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென விண்ணப்பித்தார். அவ்வாறே திருத்தந்தை 1942 அக்டோபர் 31ம் நாள் அதை நிறைவேற்றினார். 1944ல் அருட்பணி

உம்பெர்தோ பாஸ்குவாலே என்னும் சலேசிய குருவானவர், இவர் இறக்கும் வரை ஆன்ம குருவாக இருந்து வழிநடத்தினார்.

**ஒரு சலேசிய உடனுழைப்பாளர் :** அலெக்சாண்ட்ரீனா 1945ல் சலேசிய உடனுழைப்பாளராக படுக்கையிலேயே தன்னை அர்ப்பணித்து வாக்குறுதி எடுத்துக்கொண்டார். அருட்பணி உம்பெர்தோ, "சலேசிய குடும்பத்தில் ஒரு நபராக இருந்து, ஆன்மாக்களின் மீட்புக்காகவும் குறிப்பாக இளையோரின் வாழ்வு மலரவும், உலகிலுள்ள அனைத்து சலேசிய உடனுழைப்பாளர்களின் மீட்புக்காக செபிக்கவும், துன்பங்களை அனுபவிக்கவும் இந்த குடும்ப அடையாள அட்டை வழங்கப்பட்டது" என்று எழுதியிருந்த அடையாள அட்டையை கொடுத்தார். அதோடு கோயிலின் புகைப்படத்தை பெரிதாக்கி தன் கண்முன் வைத்து, அதைப்பார்க்கும் போதெல்லாம் அதில் நிகழும் மறைநிகழ்வுகளில் பங்கெடுப்பதாக உணர்ந்தார். தொன் போஸ்கோவின் பணியினை இவ்வுலகில் தொடரப் பயிற்சி எடுக்கும் துறவற பயிற்சியாளர்களின் துன்புறும் சகோதரியாக விளங்கினார்.

**விண்ணிலே நாம் சந்திப்போம் :** 1955மே 6ல் அமல அன்னை இவருக்கு தோன்றி, "சில நாட்களில் உன்னை நான் அழைத்துச் செல்வேன்" என்று கூறியபடியே அதே மாதம் 13ம் நாள் அமல அன்னை அலெக்சாண்ட்ரீனாவை அழைத்துச் சென்றார். அப்போது "பாவம் செய்யாதீர், அடிக்கடி நற்கருணை உட்கொள்ளுங்கள், அன்றாடம் செபமாலை செபியுங்கள், விண்ணிலே நாம் சந்திப்போம் செல்கிறேன்" என்று சொல்லி இன்றிலிருந்து பாலசார் ஒரு திருயாத்திரை இடமாக மாறும் என்று கூறி கண்களை மூடினார். இன்றும் ஏராளமான வாகனங்கள், திருப்பயணிகள், பாலசாரின் நெருக்கமான தெருக்களில் வந்த வண்ணமாக இருக்கின்றன. திருத்தந்தை 2ம் ஜான் பால் அவர்களால் 2004ல் அலெக்சாண்ட்ரீனாவிற்கு அருளாளர் நிலை வழங்கப்பட்டது.

**நிறைவாக :** அருட்பணி பாஸ்குவால் பின்வருமாறு எழுதுகின்றார், "திருத்தூதுவ பணிக்காக தம்மை அர்ப்பணித்துள்ள இத்தகைய தெய்வீக மக்கள், தாங்கள் விரும்பாமலே அனைவராலும் போற்றப்படுகின்றார்கள். அவர்கள் அனுபவிக்கும் வேதனை நம்மால் புரிந்து கொள்ள முடியாது"

## திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ், ச.ச.

### புனிதர்களாக அறிவிக்கப்பட்ட உல்மா குடும்பம்

நன்மையின் உந்து சக்தியாகவும், தேவையிலிருப்பவர்களுக்கு பணியாற்றுவதில் முன்மாதிரியாகவும் போலந்தின் உல்மா குடும்பம் இருக்கின்றது என்று எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ஏறக்குறைய 20,000 திருப்பயணிகள் கூடியிருந்த வத்திக்கான் வளாகத்தில் உக்ரைன்

நாட்டுக் கொடியினைப் பலர் ஏந்தியிருக்க அதனைச் சுட்டிக்காட்டி, போரினால் இன்றுவரை துன்புற்றுக் கொண்டிருக்கும் உக்ரைன் மக்களை நினைவுக்கூர்ந்த திருத்தந்தை, ஆயுத பலத்திற்கு எதிராக இரக்கச் செயல்களையும், வன்முறைக்கு எதிராக வலிமையான செபங்களையும் அளிக்க அழைப்பு விடுத்தார்.

## கத்தோலிக்க திருஅவையின் முக்கிய பணி புலம்பெயர்ந்தோர் பணி

புலம்பெயர்ந்தோரின் மேய்ப்புப் பராமரிப்பு என்பது கத்தோலிக்க திருஅவையின் முக்கிய பணி என்றும், புலம்பெயர்ந்தோர், உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள், தேவையிலிருக்கும் மக்கள் ஆகியோருக்கு எதிராக பாகுபாடு காட்டாமல் பணியாற்றுவது மிக முக்கியம் என்றும், வலியுறுத்தியுள்ளனர் வடக்கு இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை உறுப்பினர்கள். வட இந்தியாவின் சிம்லா சண்டிகர் மறைமாவட்டத்தின் ஆயர் மையத்தில் நடைபெற்ற வடக்குப்பகுதி ஆயர்கள் பேரவையின் இந்திய கத்தோலிக்க பேரவைக் கூட்டத்தில் புலம்பெயர்ந்தோர்மேல் காட்டப்படும் அக்கறை, பராமரிப்பு, வரவேற்பு ஆகியவை கத்தோலிக்க திருஅவையின் அக்கறை, பாதுகாப்பு மற்றும் வரவேற்பு அதிகம் வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்று என்றும் கலந்துரையாடப்பட்டன.

நாட்டிற்குள் புலம்பெயர்ந்தோர் மற்றும் இடம் பெயர்ந்தோரை வரவேற்றல், பாதுகாத்தல், ஊக்குவித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் சமூகத்தின் இயல்பான சூழலில் அவர்களை கொண்டு செல்வதில் உள்ள சவால்கள் மற்றும் தடைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. சண்டிகர் மறைமாவட்ட ஆயர் இக்னேஷியஸ் மஸ்கரேனாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டெல்லியின் கூடோ பேராயர் அனில் ஜே.டி. ஜம்மு மற்றும் ஸ்ரீநகரின் ஆயர் இவான் பெரேரா, ஜலந்தர் மறைமாவட்ட ஆயர் அக்னெலோ கிரேசியஸ் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

## பெங்களூரில் பசியால் வாடுவோருக்கு உதவும் ரொட்டி மையம்

கத்தோலிக்க கருணை நடவடிக்கைகளின் பாரம்பரியத் தொடர்ச்சியாக பசியால் வாடுவோர், வீடற்றோருக்கு ரொட்டி மையம் ஒன்றை நடத்தி வருகிறது பிரான்சிஸ்கன் துறவு சபை. புனித அந்தோணியார் சேவா நிலையா அல்லது புனித அந்தோணியார் ரொட்டி மையம் என அழைக்கப்படும் இந்த சேவை மையத்தின் வழியாக அசிசியின் புனித பிரான்சிஸ் அவர்களின் கருணைப் பணிகளை உயிர்துடிப்புடன் தொடர்ந்து ஆற்றுவதாக உரைத்தனர் OFM பிரான்சிஸ்கன் துறவு சபையினர். பிரான்சிஸ்கன் துறவி, அருள்பணி Trevor D’Souza அவர்களால் 2003ம் ஆண்டு ஏழைகளுக்கான சேவை மையமாகத் துவக்கப்பட்ட இந்த பணித்தளம் ஏழைகளின் முகத்தில் இயேசுவைக் காணும் நோக்கத்தில் செயல்பட்டு, சேவையாற்றி வருகிறது.

வேறு மாநிலங்களிலிருந்து குடியேறி பணியாற்றும் ஏழைத் தொழிலாளிகள், மருத்துவமனைகளில் இருக்கும் நோயாளிகளின் உறவினர்கள் என உதவித் தேவைப்படுவோர் சுயவிருப்பப் பணியாளர்கள் வழி தன் சேவையைத் தொடர்ந்து செய்து வருகிறது புனித அந்தோணியார் ரொட்டி மையம். இம்மையத்தில் பணியாற்றும் சுயவிருப்பப் பணியாளர்கள் தாங்களே முன்வந்து எவ்வித எதிர்பார்ப்புமின்றி தனியார்கள் மற்றும் நிறுவனங்கள் வழங்கும் தாராளக் கொடைகளின் வழியாக செயல் படுகின்றனர்.

**அன்பின் மதுரத்தால் விரிவாக்கப்பட்ட இதயத்தைக் கொண்டிருங்கள்**

புனித பெனடிக்டைன் தியாகிகள் என்ற துறவு சபையின் அங்கத்தினர்களுக்கு நினைவூட்டினார். பெனடிக்டைன் துறவுமடம் ஆற்றியுள்ள மாபெரும் நற்செய்தி அறிவிப்புப் பணிகளுக்கு அவர்களின் விரிவுப்படுத்தப்பட்ட இதயமே காரணம் என எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இதயத்தின் விரிவாக்கம் என்பது கடவுளைத் தேடுவதிலும், நற்செய்திக்கான ஆர்வத்திலும், இன்முக வரவேற்பிலும் எவ்வாறு உதவுகிறது என்பதை எடுத்துரைத்தார்.

இறைவனை நாம் தேடுவது, நாம் தினமும் வாசிக்கும் நற்செய்தியின் வழியாக இடம் பெறுகிறது என்ற திருத்தந்தை, நாம் படைப்பைக் குறித்துத் தியானித்தல், நம் தினசரி நிகழ்வுகள் தரும் சவால்களை எதிர்கொள்ளல், தினசரி பணி அனுபவங்களை செபமாகக் கொள்ளல், நாம் தினமும் வாழ்வில் சந்திக்கும் மக்களை உடன்பிறப்புக்களாக காணல் போன்றவைகள் வழி இறைவனை நோக்கிய தேடல் இடம்பெறுகிறது என்றார்.

இரண்டாவது, நற்செய்தி மீதான ஆர்வத்தை குறிப்பிட்ட திருத்தந்தை, ஆர்வமுள்ள சான்றுவாழ்வு வழியாக நாம் மற்றவர் வாழ்விலும் நற்செய்தி ஒளிர்விட உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மூன்றாவதாக, இன்முக வரவேற்றலை எடுத்தியம்பிய திருத்தந்தை, நான் அந்நியனாக இருந்தேன் என்னை காணவந்தீர்கள் என்ற இயேசுவின் வார்த்தைகளை மனதில் கொண்டு தன்னை நாடி வருவோரில் இயேசுவைக் கண்டு பணிபுரியும் பெனடிக்டைன் துறவுகளைப் பாராட்டினார்.

தங்கள் கதவைத் தட்டும் அனைவரையும் வரவேற்று, ஏழைகளை வரவேற்று, உதவிகளை வழங்குவதன் வழியாக சுயநலத்தாலும், பாராமுகங்களாலும், மூச்சுத் திணறிப்போய் நிற்கும் இன்றைய உலகிற்கு நன்மைத்தனத்தின் எடுத்துக்காட்டாக இருக்கும் பெனடிக்டைன் துறவிகளின் இச்செயல் மிகவும் தேவையானது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## சுடர் வாசகர் போட்டி - 102

1. இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்தல்
2. திருத்தந்தை பிரான்சிஸ்
3. எபிரேயம், அரமெயிக் மொழியிலிருந்து லத்தீன் மொழிக்கு
4. பாரிசில் உள்ள புனித லாசர் குருக்கள் இல்லத்தில்
5. புனித மத்தேயு
6. திருத்தந்தை புனித கொர்னேலியுஸ்
7. ஆண்டவரின் திருச்சிலுவை
8. புனித அன்னை தெரேசா
9. "செயற்கை நுண்ணறிவும் அமைதியும்"
10. அருளாளர் ஜோசப் கலசான்ஸ்
11. இரபேல்
12. புனித வின்சென்ட் தே பால்
13. அரமேயம்
14. இயேசு கோவிலில் காணாமல் போதல்
15. திருத்தந்தை 11ம் இன்னசென்ட்

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

A. George Stephen, Villupuram

Sr. Mery Immaculate, Thirunelveli

Mr. Martine, Chennai

## சுடர் வாசகர் போட்டி 103

1. திருத்தந்தை பிரான்சிஸ் புனிதர்களாக அறிவித்த குடும்பம் பெயரென்ன?
2. "விண்ணிலே நாம் சந்திப்போம்" என்று யார் யாரிடம் கூறியது?
3. அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி எடுத்த தீர்மானம் என்ன?
4. தொடக்கக் கால திருஅவையில் மக்கள் ஒன்றுகூடி எத்தனைப் பாடல்களைப் பாடினார்கள்?
5. ஆண்டவரின் அடிமையாக வாழ உடல்நிலை ஒரு தடையல்ல கூறியது யார்?
6. இயேசு மத்தேயு நற்செய்தி 23:3-5ல் கூறியது என்ன?
7. கத்தோலிக்கம் என்ற வார்த்தை யாருடைய காலத்தில் வந்தது?
8. இயேசுவின் பணியை அறிவித்தவர்கள் யார்?
9. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்தவர் யார்?
10. அகுஸ்தீன் தேவாரம் பரம்பில் திருப்பொழிவுப் பெற்ற ஆண்டு எது?
11. ஆண்டவரின் விண்ணேற்புக்குப் பின் நற்செய்தியை அறிவித்தவர் யார்?
12. சலேசிய ஆன்மீகம் என்பதென்ன?
13. திருத்தந்தை இதயத்தின் விரிவாக்கம் என்பதை எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?
14. புனித பவுலடிகளார் தனது சாட்சிய வாழ்வை எவ்வாறு பகிர்ந்துக்கொள்கிறார்?
15. நற்கருணையை மட்டும் உண்டு வாழ்ந்தவர் யார்?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்:.................................
முகவரி:...............................
.......................................
.......................................
.......................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

அனைத்து புனிதர்கள் விழா
இறந்த நம்பிக்கையாளர் அனைவரின் நினைவு விழா
புனித சார்லஸ் பொரோமியோ
பொதுக்காலத்தின் 31ஆம் ஞாயிறு
இலாத்தரன் ஆலயம் நேர்ந்தளிப்பு
புனித பெரிய லியோ திருத்தந்தை
பொதுக்காலத்தின் 32ஆம் ஞாயிறு
அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி
அருளாளர் மதலேன் மொரானோ
பொதுக்காலத்தின் 33ஆம் ஞாயிறு
கன்னி மரியாவை கணிக்கையாக அளித்தது
புனித ஆண்ட்ரு டுங் லாக் மறைசாட்சி
கிறிஸ்து அரசர் பெருவிழா
புனித அந்திரேயா திருத்தூதர் விழா

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

இயேசுவே உலகின் அரசர்
மரணம் என்பது முடிவல்ல...
அருளாளர் ஆர்த்திமெதே சாத்தி வாழ்வு தரும் பாடம்
திருஅவையின் செய்திகள்

அன்பு நிறை வாசகர்களே!

இம்மாத "சுடர் வாசகர் போட்டி"பதில்களை அக்டோபர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# அக்டோபர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | **ஞா** | **பொதுக்காலம் 26ம் ஞாயிறு** | **I.** எசே. 18: 25-28<br>**II.** பிலிப். 2: 1-11 | மத். 21: 28-32 |
| 2 | தி | புனித காவல் தூதர்கள் நினைவு | செக். 8: 1-8 | லூக். 9: 46-50 |
| 3 | செ | | செக். 8: 20-23 | லூக். 9: 51-56 |
| 4 | பு | அசிசி நகர் புனித பிரான்சிஸ் | நெகே. 2: 1-8 | லூக். 9: 57-62 |
| 5 | வி | அரு. ஆல்பர்ட் மர்வெல்லி | நெகே. 8: 1-4, 5-6, 7-12 | லூக். 10: 1-12 |
| 6 | வெ | | பாரூக். 1: 15-22 | லூக். 10: 13-16 |
| 7 | ச | புனித செபமாலை அன்னை நினைவு | பாரூக். 4:5-12.27-29 | லூக். 10: 17-24 |
| 8 | **ஞா** | **பொதுக்காலம் 27ம் ஞாயிறு** | **I.** எசா. 5: 1-17<br>**II.** பிலிப். 4: 6-9 | மத். 21: 33-43 |
| 9 | தி | புனிதர்கள் டென்னிஸ்,ஜான் லெயோனார்டி | யோனா. 1: 1-17 | லூக். 10: 25-37 |
| 10 | செ | | யோனா. 3: 1-10 | லூக். 10: 28-42 |
| 11 | பு | | யோனா. 4: 1-11 | லூக். 11: 1-4 |
| 12 | வி | | மலாக். 3: 13-4:2 | லூக். 11: 5-13 |
| 13 | வெ | அரு.அலெக்சாண்டிரியா மரிய தா கொஸ்தா | யோவேல் 1: 13-15,2:1-2 | லூக்.11:15-26 |
| 14 | ச | புனித முதலாம் கலிஸ்டஸ் | யோவேல் 3: 12-21 | லூக். 11: 27-28 |
| 15 | **ஞா** | **பொதுக்காலம் 28ம் ஞாயிறு** | **I.** எசா. 25: 6-10<br>**II.** பிலிப்.4: 12-14, 19-20 | மத். 22: 1-14 |
| 16 | தி | அரு. அகுஸ்தின் தேவாரம்பரம்பில் | உரோ. 1: 1-7 | லூக். 11: 29-32 |
| 17 | செ | அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் | உரோ. 1: 16-25 | லூக். 11: 37-41 |
| 18 | பு | புனித லூக்கா நற்செய்தியாளர் விழா | 2திமொ. 4: 9-17 | லூக். 10: 1-9 |
| 19 | வி | | உரோ. 3: 21-30 | லூக். 11: 47-54 |
| 20 | வெ | | உரோ. 4: 1-8 | லூக். 12: 1-7 |
| 21 | ச | | உரோ. 4: 13,16-18 | லூக். 12: 8-12 |
| 22 | **ஞா** | **பொதுக்காலம் 29ம் ஞாயிறு** | **I.** எசா. 45: 1,4-6<br>**II.** 1தெச. 1: 1-5 | மத். 22: 15-21 |
| 23 | தி | கப்பெஸ்த்தரானோ நகர் புனித ஜான் | உரோ. 4: 20-25 | லூக். 12: 13-21 |
| 24 | செ | புனித லூயிஜி குவனெல்லா | உரோ. 5:12,15,17-19.20-21 | லூக். 12: 35-38 |
| 25 | பு | | உரோ. 6: 12-18 | லூக். 12: 39-48 |
| 26 | வி | | உரோ. 6: 19-23 | லூக். 12: 54-59 |
| 27 | வெ | | உரோ. 7: 18-25 | யோவா.1: 47-51 |
| 28 | ச | புனிதர்கள் சீமோன், யூதா, திருத்தூதர்கள் விழா | எபே. 2: 19-22 | லூக். 6: 12-19 |
| 29 | **ஞா** | **பொதுக்காலம் 30ம் ஞாயிறு மற்றும் அருளாளர் ரூவா** | **I.** வி.ப. 22: 21-67<br>**II.** 1தெச. 1: 5-10 | மத். 22: 34-40 |
| 30 | தி | | உரோ. 8: 12-17 | லூக். 13: 10-17 |
| 31 | செ | | உரோ. 8: 18-25 | லூக். 13: 18-21 |